Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 7 வெள்ளிக்கிழமை (23.09.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :301

# நியாயமான தீர்வை வழங்க அரசு மறுத்தால் தமிழரின் போராட்டத்தை அங்கீகரியுங்கள்!

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 22 எம்.பிக்களும் கூட்டாகச் சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள்

கொழும்பு, செப்ரெம்பர்23

தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு நீடித்து நிலைக்கக் கூடிய சுமுகமான தீர்வொன்றைக் காண்பதற்கு இலங்கை அரசு தொடர்ந்தும் புறந்தள்ளி பின்னடிப்புச் செய்யுமானால், தமிழ்மக்களின் சுயநிர்ணயப் போராட்டத்திற்கு சர்வதேச சமூகம் சந்தேகத்திற்கு எதுவித இடமும் வைக்காமல் பூரண அங்கீகாரம் வழங்க வேண்டுமென்று கோருவதைத் தவிர, தமிழ்மக்களுக்கு வேறு மாற்றுவழி கிடையாது .

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் 22 பேரும் நேற்றுக் கூட்டாக விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

தமது நியாயமான, சட்டபூர்வமான, அரசியல் அபிலாஷைகளுக்காகப் போராடிவரும் தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முன்வருமாறு இலங்கை அரசைச் சர்வதேச சமூகம் தமது நல்லெண்ண முயற்சிகள் மூலம் தூண்டவேண்டுமென்றும் எம்.பிக்கள் 22 பேரும் கேட்டுள்ளனர்.

இந்த நல்லெண்ண முயற்சி வெற்றியளிக்

(2ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல் தினத்துக்கு ஒருவாரம் முன்பதாக பட்ஜெட்

கொழும்பு, செப்.23

2006ஆம் ஆண்டுக்கான அரசின் வரவு - செலவுத் திட்டத்தை ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒருவாரத்துக்கு முன்பு நவம்பர் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

பதில் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி

(14ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி மினிபஸ் சேவை வழமைக்கு

யாழ்ப்பாணம்,செப்.23

யாழ். - வடமராட்சி இடையிலான மினி பஸ் சேவை இன்று வழமைக்குத் திரும்பும் எனக் கூறப்பட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமரை விடவும் உயர்ந்த பதவியை கதிர்காமருக்குத் தந்திருக்க வேண்டும்

### இப்போது விசனப்படுகிறார் விமல் வீரவன்ஸ

காலஞ்சென்ற அமைச்சர் கதிர்காமர் சிறுபான்மை இனத்தவராக இருந்தபோதும் அவரை இந்த நாட்டின் பிரதமராக்க முயற்சித்தோம். ஆனால், அது முடியாமல் போய்விட்டது. ஆனால், கதிர்காமருக்குப் பிரதமர் பதவியை விட உயர்ந்த பதவி ஒன்றையே வழங்கியிருக்க வேண்டும் என்பதை இப்போது உணர்கின்றோம் என்கிறார் ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ.

மறைந்த அமைச்சர் கதிர்காமரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீது நேற்று உரையாற்றிய விமல் வீரவன்ஸ மேலும் கூறியதாவது:-

தமிழ்மக்களின் ஜனநாயக உரிமைகளைக் காப்பாற்றியவர் அமைச்சர் கதிர்காமர்.

வரலாற்றின் சிறைக் கைதியாக இருக்க விரும்பாதவர். நாட்டை இரண்டாகப் பிரிக்கும் சித்தாந்தம் கொண்ட குழுவினரின் பிடி

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி, ஹெல உறுமயவுக்கும் 'பொங்கு தமிழுக்கு' அழைப்பு!

யாழ்ப்பாணம்,செப்.23

யாழ். பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி நடை பெறவுள்ள 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு ஜே.வி.பி.,ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கட்சிகளுக்கான அழைப்பிதழ்களை பல்கலைக்கழகச் சமூகம் இரண்டு கட்சிகளினதும் முகவரியிட்டு அனுப்பியுள்ளது.

'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வு தமிழ் பேசும் மக்களின் (14ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமருக்கு நேற்று நாடாளுமன்றத்தில் அஞ்சலி

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு நாடாளுமன்றத்தில் புகழஞ்சலி செலுத்தப்பட்டது.

ஆளும்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் கதிர்காமர் புகழ் பாடினர்.

சபை முதல்வரும் சுகாதார அமைச்சருமான நிமால் ஸ்ரீ பால டி சில்வா அரசின் சார்பில் அனுதாபப் பிரேரணையைச் சபையில் சமர்ப்பித்தார்.

எதிர்க்கட்சியின் சார்பில் ஐ.தே.க. பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, எதிர்க்கட்சிக் கொரடா மஹிந்த சமரசிங்க ஆகியோர் உரையாற்றினர்.

வழமையாகவே ஜே.வி.பியினர் அனு

(14ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் விஞ்ஞாபனத்தை இறுதி செய்வதில் சு.கவிற்குள் குழப்பம் ஏற்படும் நிலைமை!

கொழும்பு, செப்.23

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்தை இறுதி செய்யும் விடயத்தில் கட்சிக்குள் பெரும் இழுபறி ஏற்படும் சாத்தியம் உருவாகிவருவதாகத் தெரிகிறது.

சுதந்திரக் கட்சியின் தலைவியும், ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க, இம்மாத இறுதியில் நாடு திரும்பிய பின்னர் கட்சியின் மத்திய குழுவின் விசேட கூட்டத்தைக் கூட்டவுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்காக

(14ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதித் தேர்தல் குறித்து

## இந்தியாவில் கிரகநிலை பார்க்கிறாராம் தொண்டா!

கொழும்பு, செப்.23

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் யாருக்கு ஆதரவை வழங்குமென்பது குறித்து நாட்டுக்குள் பல்வேறு கருத்துகள், ஹேஸ்யங்கள் கூறப்பட்டுவரும் சூழ்நிலையில் அக்கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் இது தொடர்பாக இந்தியாவில் பிரபல ஜோதிடர்களைச் சந்தித்து கிரகபலன்களைக் கேட்டு வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## கைக்குண்டு வீச்சில் கிராம சேவையாளர் பலி

ஏறாவூர், செப். 23

வாழைச்சேனை - விநாயகர்புரம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற கைக்குண்டு வீச்சுச் சம்பவமொன்றில் கிராமசேவையாளர் ஒருவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார். மேலும், இருவர் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்

(14ஆம் பக்கம் பார்க்க)

### சிங்களத் தலைவர்களோடு சேர்ந்து நின்று எதுவுமே பெறமுடியாது

## முஸ்லிம்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் குதிப்பு

### இணைய வருமாறு ஏனைய கட்சிகளுக்கும் அழைப்பு

கொழும்பு, செப்.23

ஆறு முஸ்லிம் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பான 'முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பு' முஸ்லிம்களின் உரிமை, பாதுகாப்பு மற்றும் சுயநிர்ணயம் ஆகியவற்றை முதன்மைப்படுத்தி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றது.

முஸ்லிம்களின் உரிமையைப் பாதுகாப்பதற்காக - பழைய, கசப்பான சம்பவங்களையெல்லாம் மறந்து - தன்னோடு வந்து இணையுமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கும் ஏனைய முஸ்லிம் கட்சிகளுக்கும் இக்கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

இக்கூட்டமைப்பின் சார்பில் ஜனாதிபதித்

(14ஆம் பக்கம் பார்க்க)

## நுவரெலியாவில் முக்கிய இடங்களை வீடியோப் படம் பிடித்தனராம் தமிழ்ச் சகோதரர்கள் கைது!

நுவரெலியாவில் முக்கிய இடங்களை வீடியோப் படமெடுத்தனர் எனக் கூறப்படும் இரு தமிழ்ச் சகோதரர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நுவரெலியாவில் ஜனாதிபதி மாளிகை, பிரதமர் மாளிகை, பிரதிப் பொலீஸ்மா அதிபர் காரியாலயம் உட்பட முக்கிய இடங்களை வீடியோப் படம் எடுத்தனர் என்ற சந்தேகத்தில் இவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

செவ்வாய் மாலை 5.30 மணியளவில் காவல்துறையின் விசேட

(14ஆம் பக்கம் பார்க்க)




*நாகர்கோயில் மகாவித்தியாலயத்தின் மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் உயிர்நீத்த இருபது மாணவர்களினதும் பொதுமக்களினதும் 10 ஆம் ஆண்டு நினைவுநிகழ்வு நேற்று புலோலி கிராமக்கோட்டடியில் இயங்கிவரும் மேற்படி பாடசாலையில் நடைபெற்றது.*

*நிகழ்வில் உயிர்நீத்த மாணவர்களின் உருவப் படங்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருப்பதையும் இறந்த மாணவர் ஒருவரின் தாயார் மற்றும் தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த அருட்தந்தை எஸ்.தேவனேசன் ஆகியோர் நினைவுச் சுடர் ஏற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும் அங்கு எழுதப்பட்டிருந்த நினைவுச் சுலோகம் ஒன்றையும் படங்களில் காணலாம்.*

*(படங்கள்: ரீ.சுந்தரலிங்கம் - கரவெட்டிச் செய்தியாளர்).*

## புதிய பரிவர்த்தனை நிலையம் ரெலிக்கொம்மில் இன்று திறப்பு

யாழ்ப்பாணம்,செப்.23

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தில் புதிய பரிவர்த்தனை நிலையமொன்று இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுகி அனான் இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு புதிய பரிவர்த்தனை நிலையத்தைத் திறந்துவைக்கிறார்.

ஆர்.எஸ்.யு - அல்கா ரெல் என்ற இந்த நிலையத்தின் மூலம் ஆயிரம் புதிய தொலைபேசி இணைப்புகள் உடனடியாக வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (8)


## தீக்காயத்துடன் யுவதி ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம்,செப். 23

நெருப்பில் எரிந்து படுகாயமடைந்த நிலையில் நேற்றுமாலை யாழ்.போதனா வைத்தியசாலையில் யுவதி ஒருவர் சேர்க்கப்பட்டார். பொற்பதி வீதி, கொக்குவிலைச் சேர்ந்த சிறிதாஸ் நிரோசனா (வயது 17) என்ற யுவதியே படுகாயமடைந்தவராவார்.

இவருடன் இவரது சகோதரியான சிறிதாஸ் சோபனா (வயது 19) என்பவரும் கையில் எரிகாயத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-12)

## கல்விமான் காரை.சுந்தரம்பிள்ளை காலமானார்



யாழ்ப்பாணம்,செப்.23

கலாநிதி (கவிஞர்) காரை.சுந்தரம்பிள்ளை நேற்றுமுன்தினம் இரவு லண்டனில் காலமானார். சிறுநீரகக் கோளாறினால் சிலகாலம் பாதிக்கப்பட்டிருந்த அவரது உடல்நிலை இந்தமாதம் முற்பகுதியில் மோசமடையத் தொடங்கியது.

இறக்கும் போது அவருக்கு வயது 66.

லண்டன் பல்கலைக்கழகத்தின் பட்டமும் நாடகவியல் டிப்ளோமாவும் இரண்டு முதுமாணிப்பட்டங்களும் நாடக ஆய்வுக்கான கலாநிதிப் பட்டமும் பெற்ற இக்கல்விமான் நான்குமுறை சாகித்திய மண்டலத்தின் இலக்கியப் பரிசுபெற்றார்.

பலாலி ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளராகவும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபராகவும் பணியாற்றி ஓய்வு பெற்ற சுந்தரம்பிள்ளை 'சங்கிலியம்' , 'தேனாறு', 'வள்ளி', 'பாதைமாறியபோது' முதலிய கவிதை நூல்களையும் 'ஈழத்து இசை நாடக வரலாறு''நடிகமணி வி.வி வைரமுத்து வாழ்வும் அரங்கும்', 'இந்து நாகரிகத்தில்கலை', 'சிங்களப் பாரம்பரிய அரங்கு', 'மலையகத்துக் காமன் கூத்து' ஆகிய ஆய்வுகளையும் செய்தவர்.

கலாநிதிப் பட்டத்துக்காக அவர் செய்த 'வட இலங்கையின் பாரம்பரிய அரங்கு ' என்ற ஆய்வு பாராட்டுப் பெற்றது; தமிழ் நாட்டில் வெளியிடப்பட்டது.

அறுபது, எழுபதுகளில் கவியரங்கு என்ற இலக்கிய வடிவத்தை யாழ்ப்பாணத்தில் மக்களிடையே கொண்டு சென்ற முன்னோடிகளில் காரை. சுந்தரம்பிள்ளை குறிப்பிடத்தக்கவர். (அ)

# நியாயமான தீர்வை வழங்க அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காத பட்சத்திலே தமிழ் மக்களின் சுயநிர்ணயப் போராட்டத்திற்கு அங்கீகாரம் வழங்குமாறு சர்வதேச சமூகத்தைக் கோருவதைத்தவிர வேறு மார்க்கம் எதுவும் தமிழ்மக்களுக்குக் கிடையாதெனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

2002 பெப்ரவரி 22இல் செய்துகொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகள், வடக்கு - கிழக்கில் இயல்பு நிலையைத் தோற்றுவிக்கப் படிப்படியாக மேற்கொள்ளப்படவேண்டிய நடைமுறைகள், முன்னுரிமை கொடுத்துக் கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள் ஆகியவை பற்றியும், உடன்படிக்கையில் சொல்லப்பட்டதன் பிரகாரம் இதுவரை நிறைவேற்றப்படாமல் இருக்கும் முக்கிய கடப்பாடுகள் ஆகியவை குறித்தும் சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு இந்த அறிக்கை மூலம் கொண்டுவரப்பட்டுள்ளது.

அறிக்கையின் முக்கிய விவரம் வருமாறு:-

யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தாகி 3 வருடங்கள் உருண்டோடிவிட்டன. ஆனாலும், உடன்படிக்கையில் செய்யப்பட்ட நிபந்தனையின் பிரகாரம் சகல பாடசாலைக் கட்டடங்களிலிருந்தும் இராணுவம் விலக்கப்பட்டு பாடசாலைகள் இயங்கும் நிலை உருவாகவில்லை. பொதுக்கட்டடங்களிலும் அதேநிலைதான் காணப்படுகிறது. மீன்பிடி அனுமதி தொடர்பான கட்டுப்பாடுகளும் முற்றாக நீக்கப்படவில்லை. இந்த முக்கிய கடப்பாடுகளை அரசு முற்றாக நிறைவேற்றத் தவறினாலும் உடன்படிக்கையில் சொல்லப்பட்டதன் பிரகாரம் விடுதலைப் புலிகள் முதற்தடவையாக அரசுடன் நேரடிப் பேச்சுக்குச் சென்றனர். யுத்தப் பகுதிகளில் இயல்பு நிலையைப் படிப்படியாகத் தோற்றுவிப்பதற்கு முன்னோடியாக இந்த நேரடிப் பேச்சு ஆரம்பமானது.

இந்தப் பூர்வாங்கப் பேச்சுகள் ஆரம்பமானபோது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதியின் நிர்வாகத்திற்கென இடைக்கால நிர்வாக அமைப்பொன்றை நிறுவுவது என்று உடன்பாடானது. இந்த இடைக்கால நிர்வாகம் - மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதையும், இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, புனரமைப்பைக் கவனிப்பதையும் அடிப்படையாகவும் கொண்டது. எனினும், அன்றைய ஐக்கிய தேசிய முன்னணி அரசு சில அரசியல் நெருக்கடிகளைக் காரணங்காட்டி அந்த நிர்வாக அமைப்பைக் கைவிட்டு, கூட்டுச் செயலணியை உருவாக்கி மேற்படி பணிகளைச் செய்யலாமென யோசனை கூறியது.

ஆனால், இந்தக் கூட்டுச் செயலணி பின்னர் உப குழுக்களாக மாற்றம் பெற்றது. இந்த உபகுழுக்கள் உருவாகியபோதும் அவையும் செயலுருப் பெறவில்லை. இதனால், அதிருப்தி நிலையே மக்கள் மத்தியில் ஏற்பட்டது.

அதேவேளை, உதவி வழங்கும் நாடுகளின் மாநாடொன்றை அரசு வாஷிங்ரனில் ஏற்பாடுசெய்தது.

2003 ஏப்ரல் மாதம் நடைபெற்ற இந்த மாநாட்டில் கலந்துகொள்ளாதவாறு புலிகள் புறந்தள்ளப்பட்டனர். இதன்மூலம் தமிழ்மக்கள் ஓரங்கட்டப்பட்டனர். புலிகள் இவ்வாறு ஓரங்கட்டப்பட்டபோதும், அவர்கள் சமாதானப் பேச்சுகளிலிருந்து விலகவில்லை. ஆனால், பேச்சுகளில் கலந்துகொள்வதை இடைநிறுத்திக் கொண்டனர். இவ்வாறு இடைநிறுத்தினாலும் அனுசரணையாளர்களான நோர்வேயுடனும் அன்றைய இலங்கை அரசுடனும் புலிகள் தொடர்புவைத்துக்கொண்டே வந்தனர்.

இதன்பின்னர் புலிகள், ஏககாலத்தில் எழுத்துமூலம் இரு யோச்னைகளை 2003 ஒக்ரோபர் 31ஆம்திகதி முன்வைத்தார்கள். அதிலொன்று - இடைக்கால தன்னாட்சி அதிகார சபையொன்றை நிறுவுதல். மற்றையது - இந்த யோசனைகள்மீது பேச்சுகளைத் தொடங்குவதற்கான திகதிகளை நிர்ணயிக்குமாறு கேட்டுக் கோருதல். இவையிரண்டுமே சமாதான முன்னெடுப்புகள் தொடர்பாக எழுத்துமூலம் புலிகளால் முன்வைக்கப்பட்ட முதலாவது யோசனைகளாகும்.

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனை விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட நான்காவது நாள், அதாவது 2003 நவம்பர் 4ஆம் திகதி ஐக்கிய தேசிய முன்னணி அரசின் பாதுகாப்பு, உள்துறை மற்றும் ஊடகத்துறை அமைச்சுகள் ஜனாதிபதியால் கையேற்கப்பட்டன. இவை மூன்றும் சமாதான முன்னெடுப்புகளுடன் நேரடியாக தொடர்புடையனவாக இருந்தன.

ஜனாதிபதியின் இச்செயல் காரணமாக அனுசரணையாளர்களான நோர்வே அரசு சமாதான முன்னெடுப்புகளில் தாங்கள் ஆற்றிவந்த பங்களிப்பை 2003 நவம்பரில் இடைநிறுத்திக்கொண்டது. இதற்கு, சமாதான முன்னெடுப்புக்குப் பொறுப்பு யார் என்பது தெளிவற்ற நிலைமை இருந்ததே காரணம். பின்னர் ஐக்கிய தேசிய முன்னணி அரசிற்குள் தோன்றிய அரசியல் முட்டுக்கட்டைகள் காரணமாக அந்த அரசு, ஆட்சியிலிருந்து கலைக்கப்பட்டது. 2004 ஏப்ரலில் மீண்டும் பொதுத் தேர்தல் நடந்தது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பதவியேற்றது. இந்த முன்னணி அரசு - பொதுஜன முன்னணி, ஜே.வி.பி. ஆகியவற்றின் - கூட்டமைப்பு ஆகும்.

சமாதான முன்னெடுப்புக்கு எதிராகவே ஜே.வி.பி. அன்றும் பிரசாரம் செய்தது. இன்றும் தொடர்ந்து பிரசாரம் செய்து வருகின்றமை வெளிப்படையானது.

இந்த மக்கள் சுதந்திர முன்னணி அரசின் போக்கு புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைக்கு எதிராகவும், சமாதான முன்னெடுப்புக்கு எதிராகவும் இருந்தது. சமாதான முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாமைக்கு இந்த கடும்போக்கே காரணமாகும். இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனை தொடர்பாக புலிகளுடன் பேச்சுகளை ஆரம்பிக்குமாறு எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, அரசை தூண்டி வந்திருக்கின்றது. அதுமட்டுமல்ல, புலிகளுடன் அரசு செய்துகொள்ளும் உடன்படிக்கைகளுக்குத் தமது ஆதரவு இருக்குமென்று பகிரங்கமாகக் கூறிவந்திருக்கிறது. விடுதலைப் புலிகள் இயக்கமும், இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனையின் அடிப்படையில் பேச்சுகள் தொடங்கும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாகத் திரும்பத் திரும்பக் கூறிவந்திருக்கின்றது. பேச்சுகள் தொடங்கியதும் பேச்சு மேசையில் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாக அரசு ஏதாவது மாற்றுயோசனைகளை முன்வைக்கலாமென்றும், அதைப் பற்றிப் பேச முடியுமென்றும் விடுதலைப் புலிகள் கூறிவந்திருக்கிறார்கள்.

அரசில் அங்கம்வகிக்கும் கூட்டுக் கட்சிகள் மத்தியில் தோன்றிய முரண்பாடுகள், தெளிவான கொள்கையில்லாமை என்பனவே சமாதான முன்னெடுப்புப் பேச்சுகள் ஆரம்பமாவதற்கு பெரும் முட்டுக்கட்டையாக இருந்துவருகின்றன. இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனை தொடர்பாகப் பேசுவதற்கு நாள்களைக் குறிப்பிடுமாறு புலிகள் கேட்டுக்கொண்டபோது திகதி கொடுக்கப்பட்டிருந்தால் 2003 நவம்பரில் மீண்டும் சமாதானப் பேச்சுகள் தொடங்கியிருக்கும். ஆனால், ஜனாதிபதி நவம்பர் 4ஆம் திகதி எடுத்த நடவடிக்கை காரணமாக அது கைகூடவில்லை.

யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் வடக்கு - கிழக்கில் இயங்கும் துணை இராணுவப் படைகளிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட்டிருத்தல்வேண்டும். ஆனால், அது நடைபெறவில்லை. மாறாக, இலங்கை இராணுவப் படையினர் புதிய புதிய இராணுவத் துணைப் படையினர் உருவாவதற்கு உற்சாகமூட்டுகிறார்கள். பாதுகாப்பும் கொடுக்கிறார்கள். யுத்தநிறுத்த உடன்படிக்கையை சீர்குலைக்கும் பாரிய சம்பவங்களுக்கு இவையே காரணமாகும். இதுபோன்ற சம்பவங்கள் இன்றும் தொடர்கின்றன.

மேலும், சமாதானப் பேச்சுகள் முன்னெடுப்பதற்கான எதிர்பார்ப்பு அருகியவேளை, ஆழிப்பேரலை வந்து வடக்கு - கிழக்குக் கரையோரப் பகுதிகளைப் பெரிதும் பாதித்துவிட்டது. இதன் விளைவாகப் பாரிய மனிதாபிமான நெருக்கடிகள் உருவாகின. யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த வடக்கு - கிழக்குப் பகுதி மீண்டும் பொருளாதார ரீதியாக மேலும் பாதிக்கப்பட்டது. அதன் கட்டமைப்புகள் எல்லாம் அழிந்துபோயின

ஆழிப்பேரலையால் ஏற்பட்ட பேரழிவுகளிலிருந்து மீட்சி பெறுவதற்கான நடவடிக்கைகளை மக்கள் எதிர்பார்த்திருந்தவேளை, சர்வதேச சமூகம் அதனை இனங்கண்டு உதவ முன்வந்தது. விடுதலைப் புலிகளும் அரசும் சேர்ந்து இந்தப் பேரழிவிலிருந்து மீள்வதற்கான களத்தையும் ஏற்படுத்தின. சமாதானப் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நல்லதொரு சூழ்நிலையை உருவாக்குவதற்கு முன்னோடியாக இலங்கை அரசும் - விடுதலைப் புலிகளும் ஒரு கூட்டுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கலாம் என்றும், இதன்மூலம் ஆழிப்பேரழிவு நிவாரணப் பணிகளைச் செய்யலாமென்றும் சர்வதேச சமூகம் தெரிவித்தது.

ஆனால், பல்வேறு தாமதங்களின் பின்னர் அரசு இந்தப் பொதுக்கட்டமைப்பை நிறுவ இணங்கியது. இப்பொதுக் கட்டமைப்புக்குச் சர்வதேச சமூகமும் பூரண ஆதரவு வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். ஆனால், சமாதான முன்னெடுப்புக்கு எதிராக பிரசாரம் செய்யும் ஜே.வி.பி. - பொதுக்கட்டமைப்புக்கு எதிராக வழக்கொன்றைத் தாக்கல்செய்தது. இதனால், இப்பொழுது பொதுக்கட்டமைப்பு உருப்பெற முடியாமல் போய்விட்டது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்கள் தொடர்ந்தும் கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டே இருக்கிறார்கள். இந்தப் பொதுக்கட்டமைப்பு தொடர்பான உடன்படிக்கைக்கும் தமிழர்களது அரசியல் அபிலாஷைகளுக்கும் எதுவித தொடர்புமில்லை என நாங்கள் வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம்.

இப்பொழுது ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவிருக்கின்றது. ஆளுங்கட்சி வேட்பாளராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ போட்டியிடுகிறார். தனக்கு ஆதரவு திரட்டும் முகமாக அவர் ஜே.வி.பியுடனும், ஜாதிக ஹெல உறுமயவுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செய்து கொண்டிருக்கிறார். அவர் இவர்களுடன் இணங்கியுள்ள அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது, அது தமிழரின் தேசிய பிரச்சினைக்கு பேச்சுகள் மூலம் தீர்வுகாண முடியும் என்ற எதிர்பார்ப்பை சிதறடிப்பதாகவே உள்ளது. பேச்சுக்கான கதவை மூடுவதாகவும் இருக்கின்றது.

சமாதான முன்னெடுப்புகள் ஆரம்பிக்கப்பட்ட நாள்களிலிருந்து இடம்பெற்ற அரசியல் சம்பவங்களைப் பார்க்கும்போது இலங்கை அரசிற்கு தமிழ்மக்களையும் ஒன்றிணைத்து கூட்டாக நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என்ற உறுதியோ, வல்லமையோ இல்லை என்பது தெளிவு. அத்தோடு, தமிழர்களின் அவசிய மனிதாபிமான தேவைகள் என்றாலும் சரி, சமாதான முன்னெடுப்புக்கான பரந்துபட்ட நடவடிக்கைகள் என்றாலும் சரி, அவற்றில் கரிசனை செலுத்துவதற்கு இலங்கை அரசுக்கு உறுதியும் கிடையாது; வல்லமையும் இல்லை. விடுதலைப் புலிகளுடன் பேச்சுகள் நடத்துவதற்கு முன்வராமை இலங்கை அரசு தமிழ் மக்களின் ஒருமனதான மன உறுதியை உதாசீனஞ்செய்வதாகவே இருக்கின்றது. இந்தநிலைமை இன்று தமிழ்மக்களைப் பெரும் அவல நிலைக்குத் தள்ளிவிட்டிருக்கிறது.

இந்தத் தேசியப் பிரச்சினைக்கு நீடித்து நிலைக்கக் கூடிய சட்டபூர்வமான, நியாயமானதான அபிலாஷைகளை நிறைவுச் செய்யக்கூடிய, திருப்திப்படுத்தக்கூடிய, சுமூகமான தீர்வொன்றையே தமிழ்மக்கள் இன்று எதிர்பார்த்திருக்கின்றார்கள். எனவே, இத்தகைய சுமூகமானத் தீர்வொன்று கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்குச் சர்வதேச சமூகம் தங்களது நல்லெண்ணத்தை பயன்படுத்தவேண்டும் என்று தமிழ்மக்கள் சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

இலங்கை அரசு தொடர்ந்தும் சுமுகமான தீர்வொன்றைத் தராமல் இழுத்தடித்து உதாசீனம் செய்யுமானால், தங்களது சுயநிர்ணயப் போராட்டத்திற்கு பூரண அங்கீகாரத்தை தருமாறு சர்வதேச சமூகத்தைக் கோருவதைத் தவிர தமிழ்மக்களுக்கு வேறு மாற்று வழி கிடையாது -இவ்வாறு எம்.பிக்கள் 22 பேரும் கூட் டாகத் தெரிவித்துள்ளனர்.

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# நீலமும், பச்சையும் நிறத்தால் வேறு ஆனால் பேரினவாத சாயத்தில் ஒன்று

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை சிங்களத் தலைமைகள் - சிங்களக் கட்சிகள் - அவை எவையாக இருந்தாலும், ஒட்டு மொத்தத்தில் 'ஒரு குட்டையில் ஊறிய மட்டைகள்தாம்'. அதனை நிரூபிக்கும் விதத்தில்தான் பெரும்பான்மையினரான சிங்களவர்களின் இரண்டு பெரும் கட்சிகளும் நடந்துகொள்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறவேண்டும் என்ற சுயலாப அரசியலுக்காக, தமிழர் விரோதப் போக்குடைய பௌத்த, சிங்கள மேலாண்மைவாதிகளை ஆளும் கட்சி வேட்பாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஒன்றுதிரட்டி தமக்குப் பின்னால் அணி சேர்க்கிறார். தமிழர் விரோதப் போக்கை இப்படிப் பகிரங்கமாக அவர் வெளிப்படுத்துகின்றார்.

மறுபுறத்தில் அமைதித் தீர்வு, சமாதான முயற்சி, அதிகாரப் பகிர்வு என்றெல்லாம் தமிழர்களின் காதில் வழமைபோல பூச்சுற்றும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியோ, ஒருபக்கம் தமிழர்களை அரவணைப்பதாகக் காட்டிக்கொண்டு, மறுபக்கம் பெரும்பான்மையினரைச் சமாளிக்க தமிழர் விரோதப் போக்கை அவர்களின் முன்னால் வெளிப்படுத்துகின்றது.

அவசரகாலச் சட்ட நீடிப்பு விவகாரத்தில் நாடாளுமன்றத்துக்குள் ஐக்கிய தேசியக் கட்சி நடந்துகொண்ட விதம் இதனைத் தெட்டத்தெளிவாகத் தமிழர்களுக்கு எடுத்துணர்த்தியிருக்கின்றது.

அவசரகாலச் சட்டம் ஒருதலைப்பட்சமாகத் திணிக்கப்பட்டதால் இன்று சொல்லொணத் துன்ப, துயரங்களுக்கும் இடைஞ்சல்களுக்கும் ஆளாகியிருப்பவர்கள் தமிழர்கள். குறிப்பாகத் தென்பகுதித் தமிழர்களும், மலையகத் தமிழர்களும்.

மலையகத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்வோர் இந்த அவசரகாலச் சட்டத்தினால் தமது மக்களுக்கும் ஏற்படுத்தப்படுகின்ற இடைஞ்சல்கள், இன்னல்கள், தொல்லைகளை நாடாளுமன்றத்தில் விலாவாரியாக எடுத்துரைத்தனர். ஆனால், அப்படியெல்லாம் கூறிவிட்டு, தமது பதவிகளையும், அதிகாரங்களையும் தக்கவைப்பதற்காக - வருமதிகளை இழக்காமல் இருப்பதற்காக - தமது நிலைப்பாட்டில் 'குத்துக்கரணம்' அடித்து, அவசர காலச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். தமிழர் தலையில் இடிபோல இறங்கிய அவசரகாலச் சட்டத்துக்கு ஆதரித்துத் தாம் வாக்களித்தமையை நியாயப்படுத்துவதற்கு அவர்கள் கூறும் காரணங்கள் விநோதமானவை. தமது மக்களை ஏமாளிகளாக நினைக்கும் அத்தலைவர்களின் வழமையான போக்கே இப்படி மக்களின் தலையில் மிளகாய் அரைப்பது போன்றதுதான். அதையே இப்போதும் செய்திருக்கின்றார்கள்.

அதேபோலத்தான் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவும் இவ்விடயத்தில் நடந்துகொண்டது என்பதைத் தமிழர்கள் மறந்துவிடக் கூடாது. கவனத்தில் கொள்ளவேண்டும்.

அவசரகாலச் சட்டக் கெடுபிடிகளால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள தமிழினம் தொடர்பாக ஐ.தே.க. நடந்துகொண்ட விதம் கவனிக்கத்தக்கது.

✱ இச்சட்டத்தால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள தொல்லைகள் குறித்து ஐ.தே.க. சார்பில், மேற்படி நாடாளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்ட எம்.பிக்கள் எவருமே கருத்துரைக்கவில்லை; கவலைப்படவுமில்லை. - டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனாவைத்தவிர

✱ அதற்கு மாறாக ஐ.தே.கட்சி சார்பில் அந்த விவாதத்தில் பேசுவதற்குக் கட்சித் தலைமையால் அனுமதிக்கப்பட்ட கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பியான நவீன் திஸநாயக்கா தமிழரைப் பார்த்து - புலிகளைக் குறிப்பிட்டு - ''போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்'' என்று யுத்தப் பிரகடனம் செய்தார். ஒரு பக்கம் சமாதான முகம் காட்டும் ஐ.தே.க., மறுபக்கத்தில் யுத்த முகத்தை முன்வைக்கவும் தவறவில்லை. அதுமட்டுமல்ல, அவசரகாலச் சட்டத்தால் தமிழர்கள் படும் அவலங்களை எடுத்துரைத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களை ஐ.தே.கட்சியின் எம்.பியான நவீன் திஸநாயக்கா கரித்துக் கொட்டவும் தவறவில்லை.'' தமிழ்க் கூட்டமைப்பினர் புலிகளுக்காக பதறுகின்றனர். வன்னியிலிருந்து வருகின்ற அறிக்கைகளையே அவர்கள் நாடாளுமன்றில் படிக்கின்றனர்.''- என்று விமர்சித்து, தமிழர்களின் கஷ்டம் குறித்து, எடுத்துரைத்த தமிழ்ப் பிரதிநிதிகளுக்கு 'புலிச்சாயம்' பூச முயன்றார் ஐ.தே.க. தலைமையால் இதுகுறித்து பேசுவதற்காக நிறுத்தப்பட்ட எம்.பியான நவீன் திஸநாயக்கா.

✱ ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுள் ஒரேயொருவரே வடக்கு - கிழக்குப் பகுதியைச் சேர்ந்த தமிழராவார். கொழும்பு மாவட்டத்திலிருந்து தெரிவான மகேஸ்வரன் எம்.பி. அவர். அவசரகாலச் சட்டத்தால் தமிழர்கள் படும் அவலத்தை அம்பலப்படுத்தக் கூடிய பொருத்தமான ஒரே பிரதிநிதி ஐ.தே. கட்சியில் அவர்தான். தமிழர்கள் படும் அவலத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எடுத்துரைத்தபோது அதற்கு தனது எம்.பி. ஒருவரைக் கொண்டு ' புலிச்சாயம்' பூசிய ஐ.தே.கட்சி, உண்மை நிலையை தனது அணியில் உள்ள ஒரேயொரு தமிழ் எம்.பி. அம்பலப்படுத்திவிடுவார் என அஞ்சி அவரது வாய்க்கும் பூட்டுப் போட்டுவிட்டது.

ஐ.தே.கட்சியின் இத்தகைய செயற்பாடு, தமிழர்கள் சார்பாக எத்தகைய நிலையை அது கொண்டிருக்கிறது என்பதை - அக்கட்சியின் உண்மைச் சாயத்தை - அம்பலப்படுத்தியிருப்பது ஒருபுறமிருக்க, மறுபுறத்தில் ஐ.தே.கட்சி போன்றவற்றை நம்பி, அதில் சவாரி விட ஏறியிருக்கும் மகேஸ்வரன் போன்ற தமிழர்களுக்கும் உண்மை நிலையை உணரவைத்திருக்கும் - உறைக்கவைத்திருக்கும் - என நம்பலாம்.

இன்றைய நிலைமையை சுருக்கமாகக் கூறுவதானால் - புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன சுட்டிக்காட்டியிருப்பதுபோல - சிறுபான்மையினருக்கு எதிரான விடயத்தில் பிரதமர் மஹிந்தவும் அவரது அணியினரும் இப்போது பரகசியமாக நடந்துகொள்கிறார்கள்; ரணிலும் அவரது அணியினரும் இரகசியமாகச் செயற்படுகிறார்கள். அவ்வளவுதான்.

நீலமோ,பச்சையோ நிறத்தில்தான் வேறுபாடு. பேரினவாதப் போக்கு என்ற சாயத்தில் அவற்றுக்கிடையே வித்தியாசம் ஏதுமில்லை. இதுதான் உண்மை. இதனைத் தமிழர்கள் உணர்ந்து கொண்டால் சரி.

தமிழரைப் பொறுத்தவரை அவர்களுள் ஒருவர் மாமனும் அல்லர்; மற்றவர் சிற்றப்பனும் அல்லர்; இருவருமே மாற்றார்தாம். நம்மை அடிமைகளாகக் கருதுபவர்கள்தாம். தமது தந்திரத்தின் மூலம் நம்மை அடிமைகளாக்க முயற்சிப்பவர்கள்தாம்.

ஆனால், அதைப் 'பச்சை'யாகக் காட்டாமல் ஒளிவு மறைவாகச் செய்பவரை விட, 'நீல' வானப் பின்னணியில் ஆபத்தைக் குறிக்கும் 'சிவப்போடு' சேர்ந்து வெட்டவெளிச்சமாகச் செய்பவர் எவ்வளவோ மேல்....!

# நல்லூர் உற்சவகாலத்தில் கண்டெடுத்த பொருள்கள்

யாழ்ப்பாணம்,செப்.23

நல்லைக்கந்தன் உற்சவ காலத்தில் பக்தர்களால் தவறவிடப்பட்ட சில பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அவற்றைத் தவறவிட்டவர்கள் உரிய ஆதாரம் காட்டி நல்லூர் இந்து விடுதியிலுள்ள மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கைக்கடிகாரங்கள், மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள் திறப்புகள், வீட்டுத் திறப்புகள், காற்சங்கிலிகள், அடையாள அட்டைகள், மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரங்கள் என்பவையே இவ்வாறு கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகளுக்கு உரியவர்களின் விவரம் வருமாறு:-

இ.தவராஜ் (கச்சேரி ஒழுங்கை), ந.சந்திரவதனி (2ஆம் வட்டாரம், எழுவைதீவு), இ.அன்னலெட்சுமி (சின்னடம்பன், நெடுங்கேணி), புஸ்பலட்சுமி எட்வட்ஜோன் (கலடியன் வீதி, பெரிய கல்லாறு மேற்கு), சு.ஆர்த்தியான் (கந்த முருகேசனார் வீதி, புலோலி தெற்கு), ஆ.விசுவலிங்கம் (பள்ளமடு), வி.பிரசன்னா (பூந்தோட்டம் நலன்புரி நிலையம்), க.சரஸ்வதி (6ஆம் வட்டாரம் வேலணை தெற்கு), வி.பிரசன்னா (மானிப்பாய்), க.தம்பிஐயா (பத்தமேனி, வலி. கிழக்கு) -

கண்டெடுக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரங்களுக்கு உரியோரின் விவரம் வருமாறு:-

கே.கிருஸ்ணகுமாரி (உரும்பிராய்), எஸ்.ரீ.கோபாலசிங்கம் (மட்டக்களப்பு), ரி.கெஸ்றொன். (ஒ-202)

# புனர்வாழ்வுக்கழக சிமெந்து லொறி யாழ்.வரத்தடை!

வலி.வடக்கு,செப்.23

யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களுக்கென தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் வன்னியிலிருந்து எடுத்துவரப்பட்ட சிமெந்து முகமாலையில்வைத்து லொறியுடன் திருப்பி அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது.

வன்னியில் இருந்து சிமெந்து கொண்டுவந்த லொறி இராணுத்தினரின் முகமாலைச் சோதனைச் சாவடியில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. பின்னர் அந்த லொறி சிமெந்துடன் திருப்பி அனுப்பப்பட்டது. (ஒ-86)

# சுகாதார சேவை வெற்றிடம்

வலி.தென்மேற்கு,செப்.23

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளிலும் மற்றும் சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களிலும் பணிபுரிந்துவரும் ஐந்து வருட சேவையைப் பூர்த்திசெய்த பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட சிற்றூழியர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு யாழ். சுகாதார சேவைப் பிரதி மாகாணப் பணிப்பாளரினால் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

வைத்தியசாலை மேற்பார்வையாளர், நீர் இறைக்கும் இயந்திர இயக்குநர், இயந்திர மேற்பார்வையாளர், தையல் மாது, சமையலாளர், விடுதி மேற்பார்வையாளர், துவிச்சக்கரவண்டிச் சேவகர், காவலாளி, ஆதார மேற்பார்வையாளர், பாடசாலை பற்சிகிச்சை தொழிலாளி, தொலைபேசி இயக்குநர் ஆகிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காகவே சிற்றூழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (ஒ-51-135)

# சாயி நிறுவனங்களின் ஏற்பாட்டில் ஆறாவது வீடு கையளிப்பு வைபவம்


யாழ்ப்பாணம்,செப்.23

வடபிராந்திய சத்யசாயி சேவா சங்கங்களின் இணைப்புக் குழுவினால் அமைக்கப்பட்டுவரும் சத்யசாயி வீட்டுத் திட்டத்தின் 6ஆவது வீடு கையளிப்பு வைபவம் இன்று நடைபெறவுள்ளது.

உடுவில் தெற்கு, சுன்னாகத்தில் பட்டியோலை என்ற கிராமத்தில் இந்த வீடு நிறுவப்பட்டுள்ளது.

தாய், தந்தையரைப் பிரிந்த ஐந்து பிள்ளைகளும் அவர்களுக்கு உதவியாக வசித்துவரும் பசுபதி என்னும் வயோதிப மாதுவுக்கும் இந்த வீடு வழங்கப்படுகிறது.

சாயி பக்தர்களின் வழிகாட்டலிலும் வழிநடத்தலிலும் அவர்களது பங்களிப்பிலும் இந்த வீடமைப்புத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகிறது. (ஐ)



இதுவரை வசித்துவந்த வீடு | புதிதாக நிறுவப்பட்ட வீடு | பெற்றோரை இழந்த பிள்ளைகள்

## உதயவாக்கு

காலம், சூழ்நிலை, மனப்போக்கு மூன்றுமே வாழக்கையின் எச்செயலுக்கும் அடிப்படைக் காரணங்களாகின்றன.

- காந்திஜி-

## நாளை

புரட்டாதி 08
சனிக்கிழமை
24 08.2005
தி...: ஸப்தமி
பின்னிரவு: 3.11 வரை
நட்சத்திரம்: ரோகினி
முன்னிரவு: 11.31 வரை
சுபநேரம்: 03.02 - 04.32
ராகுகாலம்: 09.02 - 10.32
(யாவும் பழைய நேரப்படி)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கென மேலும் ஒரு தொகுதி வீடுகள் கட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம்,செப்.23

யுத்தத்தால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களில் மேலும் ஒரு தொகுதி மக்களுக்கென வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வந்துள்ளன.


இத்தகவலை யாழ். அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யுத்த அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் கிராம ரீதியாக இனங்காணப்பட்டு அவர்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுக்கும் பணி உலக வங்கியின் நிதியுதவியுடன் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

உலக வங்கியின் வீடமைப்புத் திட்டத்தின்கீழ் ஆயிரத்து 635 வீடுகள் அமைப்பதற்கான நிதி தற்போது பகுதிக் கொடுப்பனவாக வழங்கப்பட்டுவருகின்றது.

மேலும் 350 வீடுகளை யுத்தத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட - உடல் மற்றும் உடைமை அழிவுகளைப் பெருமளவில் சந்தித்த மக்களுக்கு அமைத்துக் கொடுப்பதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

இவற்றில் 200 வீடுகளை உலக வங்கியும் 150 வீடுகளை ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனமும் அமைத்துக்கொடுக்கவுள்ளன என்று அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (ஒ-202)



## 21.09.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

சனிதா வாசனாவ

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 200618137 இலிருந்து 200636707 வரை

சீட்டிழுப்பு இல. 1643

வெற்றி எண்கள்

**13 19 25 49**

சுப்பர் எண் **15**

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.95,82,900/- வெல்லப்பட்டுள்ளது

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 01 | 95,82,900/- | 95,82,900/- |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 35 | 5,000/- | 1,75,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 486 | 1,000/- | 4,86,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,598 | 500/- | 7,99,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 24,025 | 40/- | 9,61,000/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 22,755 | 20/- | 4,55,100/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,41,515 | 10/- | 34,15,150/- |
| | | மொத்தம் | 1,68,74,150/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம்,பைசிக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 1,73,74,150/- |

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: **20,00,000/-**

தொடர் இல. 300588649 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுக்கள் 2005 செப்டம்பர் 24 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் ரூபா 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் பைசிக்கிள் அடங்கிய பரிசு முறை வென்றெடுத்த 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 200622443-2-31 |
| மாத்தறை | 200620532-3-97 |
| அம்பாறை | 200620119-1-80 |
| இரத்தினபுரி | 200623879-3-60 |
| திருகோணமலை | 200621300-1-67 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33,செயின்ட் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.


# கண்ணீர் அஞ்சலி

## திருமதி சரஸ்வதி கனகரட்ணம்

எங்கள் அன்பிற்கும் பெரும் மதிப்பிற்குமுரிய

**திரு.கனகரட்ணம் கேசவன்**

J.P.U.M., சட்ட அறிஞர் அவர்கள்

அன்பு அன்னையை இழந்து துயருறும் அவருக்கும் குடும்பத்தினருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

K.N.சச்சிதானந்தன்
இராகுலசூரியன்ஸ்
பிரதான வீதி, பருத்தித்துறை.

(சி/45246) (24-45-15)

# மரண அறிவித்தல்

## மத்தியாஸ் ஆரோக்கியநாதன்

பருத்தித்துறையைச் சேர்ந்த மத்தியாஸ் ஆரோக்கியநாதன் காலமாகிவிட்டார்.

அன்னார் பலாலியைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற மத்தியாஸ் - இராக்கினியம்மாவின் பாசமிகு மகனும் ஹென்றி அன்னம்மாவின் மருமகனும் அன்னமேரியின் பாசமிகு கணவரும் றெடின், டெனிஸ் (U.K.), யஸ்ரின், ஆன், ஜடா, யூட் (U.K.), அன்புராணி, அன்னராணி, நேசராணி, நேசன் ஆகியோரின் மாமனாரும் மீரா, நகிம், ஜீனுசா, விஷ்வா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.09.2005) சனிக்கிழமை புனித தோமையார் ஆலயத்தில் பிற்பகல் 3 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பருத்தித்துறை சேமக் காலைக்கு நல்லடக்கத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தும்பளை வீதி,
03ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை. (சி/45242) (24-45-15)

தகவல்:
குடும்பத்தினர்.

# தென்னை அபி.சபையில் ஆளணிப் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், செப்.23

யாழ்.மாவட்ட தென்னை அபிவிருத்திச் சபையில் நீண்ட காலமாக ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதாக யாழ்.மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட தென்னை அபிவிருத்திச் சபையில் ஐந்து வருடகாலமாக உத்தியோகத்தர் ஒருவர் மட்டுமே பணிபுரிந்து வருகின்றார் என்றும் -

இதனால் தென்னை அபிவிருத்தி தொடர்பான நடவடிக்களை ஒருவர் மட்டுமே மேற்கொள்ளவேண்டியிருப்பதால் அபிவிருத்திச் செயற்பாடுகள் எதிர்காலத்தில் மந்த நிலையை அடையும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும்- அவர் கூறினார்.

ஆளணிப் பற்றாக்குறை தொடர்பாகப் பல தடவைகள் உரியவர்களிடம் முறையிடப்பட்டிருந்தும் இதுவரை பலன் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ரி-12)

# வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,செப்.23

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளை பதவி உயர்வுப்பரீட்சைகளுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளது.

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III, இலங்கை அதிபர் சேவை 2 II, தரம் 3, இலங்கை ஆசிரியர் சேவை தரம் I ஆகிய பதவி உயர்வுப் பரீட்சைகளுக்காக நடத்தப்படும் இவ்வழிகாட்டல் கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்தியகல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புவோர் இராமநாதன் கல்லூரி, வதிரி திரு இருதயக்கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் இன்று பிற்பகல் 3 மணிதொடக்கம் 5 மணி வரையும் -

கொக்குவிலிலுள்ள சங்க அலுவலகத்தில் நாளை காலை 8 மணிதொடக்கம் மாலை 5 மணிவரையும் தமது விவரங்களைப் பதிவு செய்யுமாறு சங்கச் செயலாளர் அ.பாலச்சந்திரன் கேட்டுள்ளார்.

(ஒ-202)

# வாகனத்தில் வந்தகுழு ஆயுதங்களுடன் சிக்கியது!

கரவெட்டி,செப்.23

வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலீஸாரிடம் வாகனமொன்றில் ஆயுதங்களுடன் வந்த சிலர் சிக்கினர்.

நேற்றுமுன்தினம் நெல்லியடிப் பொலீஸார் பொலீஸ் நிலைய வீதியில் கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.

அப்போது அவ்வழியாக வந்த வாகனம் ஒன்றைச் சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டனர். அந்தவாகனத்தில் ஆயுதங்கள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து வாகனத்தில் இருந்தவர்களைக் கைதுசெய்யப் பொலீஸார் முயன்றனர். அக்குழுவில் சிலர் தப்பியோடிவிட 10 பேர் பொலீஸாரிடம் சிக்கினர்.

ஆயுதங்கள் மற்றும் வாகனத்தை பருத்தித்துறை நீதிமன்றில் ஒப்படைத்த பொலீஸார் கைதானவர்களையும் ஆஜர்படுத்தினர்.

அவர்களை அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், தப்பியோடியவர்களையும் கைது செய்து ஆஜர்செய்யுமாறு பொலீஸாரைப் பணித்தார்.

(ஒ-70)

# தமிழறிவுத் தேர்வு ஒத்திவைப்பு

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வடக்கு - கிழக்கு மாகாண ஆசிரியர்களிடையே வலய ரீதியாக நாளை சனிக்கிழமை நடத்தப்படவிருந்த தமிழறிவுத் தேர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் போட்டிகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமையே நடைபெறவுள்ளன என்று வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. (9)


## City & Guilds International Lond. (U.K)
## நிறுவனத்தினால் நடத்தப்படுகின்ற

★ Telecommunications Systems
★ Electrical & Electronics Engineering

G.C.E.(O/L)அல்லது G.C.E.(A/L) படித்த இருபாலரும் அனுமதிக்கப்படுவர். வகுப்புகள் யாவும் கொழும்பில் உள்ள APSS International நிறுவனத்தினால் நடத்தப்படுகின்றது

**வகுப்புகள் ஆரம்பம் 05-10-2005**

வகுப்பில் சேரவிரும்புவோர்கள் 01-10-2005 இற்கு முன் விண்ணப்பிக்கவும்
Note: Advanced Diploma தராதரத்துடன் Chartered Engineering Graduate Diploma நேரடியாகப் பயிலலாம். அத்துடன் London பல்கலைக்கழகங்களில் 2 வருட அனுமதிகள் பெற்றுக்கொடுக்கப்படும்.
மேலதிக விவரங்களுக்கு:

**JAFFNA TECHNICAL INSTITUTE**
இல. 07.பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Regd No: 15251, T.P.: 021 222 3335
(சி/45251)


## அஞ்சனந்தாழ்வு
## கொலைவிலக்கி ஆரோக்கிய அன்னை ஆலயம்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### திருநாள் இறுதி வழிபாடுகள்

இன்று (23-09-2005) வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு
திருச்செபமாலை, திருப்பலி.
24-09-2005 சனிக்கிழமை மாலை 5மணிக்கு
திருப்பலி, நற்கருணை வழிபாடு, பவனி நற்கருணை ஆசீர்.
25-09-2005 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு
திருநாள் திருப்பலி, சுருபவப்பவனி -
கஸ்தூரியார் வீதி, நாவலர்வீதி,
கே.கே.எஸ். வீதி, கின்னர் லேன்.
வேளாங்கன்னி ஒழுங்கை ஊடாக ஆலயத்தை வந்தடையும் அன்னையின் ஆசிபெற அனைவரையும் அழைக்கின்றோம்.

பங்குத்தந்தை, பங்குமக்கள்.

விளம்பர அனுசரணை:
டாக்டர் G.எட்வேட், கபிரியேல் எட்வேட் வைத்தியசாலை,
(40334)(26-45-15-24) 24, மத்திய பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

# இரண்டாவது ஆண்டு நினைவலைகள்

மண்ணில்: 03 - 02 - 1935



விண்ணில் 23 - 09 - 2003

## அல்விரேற் மேரி பிலோமினா

"சீவியத்தில் நேசித்தோம்
மரணத்திலும் மறவோம்"

ஈராண்டு காலமது உருண்டோடி மறைந்திடினும்
ஈரவிழிகள் இங்கு காயவில்லை உம் நினைவால்

அன்னாரின் நினைவாக யாழ்.அருள் ஆச்சிரமத்தில் இன்று காலை 6.30மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுகிறது.

பிரிவால் துயருறும்:
கணவன், மகன் குடும்பம், மருமக்கள்.

தற்போதைய முகவரி:
இல.05, மருதடி வீதி, யாழ்ப்பாணம்.
1/14, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம்.
(40315)(46-45-15-24)


# வேலை பயிலுநர் தேவை

கொக்குவில் - பிறவுண் வீதியில் அமைந்துள்ள

## ரயர் நிரப்பும் தொழிற்சாலைக்கு பயிலுநர்கள் தேவை





எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்.

**நோர்தேண் இண்டஸ்றீஸ் (பி) லிமிட்**
69, பிறவுண் வீதி - கொக்குவில்.


உ
சிவமயம்

# 96ஆவது பிறந்ததின வாழ்த்தும் 71ஆவது திருமண வாழ்த்தும்

23.09.2005



எமது ஐயா,
சைவத்திரு. திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி
(இளைப்பாறிய ஆசிரியர்)
அவர்களின் தொண்ணூற்றாறாவது அகவை நிறைவு நாளையும் திருமதி தையல்நாயகி அம்மையாருடன் இல்லற வாழ்வில் இணைந்த எழுபத்தோராவது ஆண்டையும் முன்னிட்டு எமது குலதெய்வம் குருநாதசுவாமி திருவருளால் நூற்றாண்டு விழாவைக் காணும் பெரும்பேற்றைப் பெறவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.
இன்று காலை குருநாதசுவாமி கோயிலில் நடைபெறும் அபிடேகம்,பூசைகளில் வழிபாடு செய்யும்வண்ணம் அன்பர்களை மனமகிழ்வுடன் அழைக்கின்றோம்.

இயாமா வளவு,
தெல்லிப்பழை.
(40336) (24-11-17-38)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## வைத்திய அதிகாரிகள் பணி நியமனம்

குருநகர்,செப்.23

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நிரந்தர சுகாதார வைத்திய அதிகாரியாக டாக்டர் எஸ்.சிவகணேசன் பொறுப்பேற்கவுள்ளார் என யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதேவேளை, டாக்டர் எம். தயாளன் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் தமது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-51)

## மண்ணெண்ணையை தண்ணீரென எண்ணி அருந்தியதால் பாதிப்பு!

தென்மராட்சி,செப்.23

சோடாப் போத்தலுக்குள்ளிருந்த மண்ணெண்ணெயைத் தண்ணீரென நினைத்து அருந்திய பெண் புரையேறிய நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

மட்டுவில் தெற்கில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த 42 வயதுப் பெண்மணியே பாதிக்கப்பட்டவராவார்.

பச்சை வர்ண பிளாஸ்ரிக் சோடாப்போத்தலில் மண்ணெண்ணை நிரப்பிவைக்கப்பட்டிருந்ததாகவும் -

அதனாலேயே அவரால் அடையாளம் காண முடியவில்லை என்றும்- தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## கரவெட்டியில் சிகிச்சை முகாம்

வடமராட்சி,செப்.23

சர்வதேச முதியோர் வாரத்தை யொட்டி கரவெட்டி பிரதேச செயலகம், கோண்டாவில் சிவபூமி பாடசாலை கண்தான சபை, யாழ்.போதனா வைத்தியசாலை ஆகியவை இணைந்து கடந்த (ஞாயிறு) வாரம் நடத்திய இலவச கண் வைத்திய முகாமில் 50 முதியவர்கள் சிகிச்சை பெற்றனர்.

கண் சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.குகதாசன் இச் சிகிச்சை முகாமை இலவசமாக நடத்தினார்.

கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் முதியோர் வார முதற்கட்ட நிகழ்வாக இச் சிகிச்சை முகாம் இடம்பெற்றது. (ஒ-173)

### சாவகச்சேரி நவீன சந்தையில்

## வாடகை நிலுவை உள்ள கடைகளை மீளப்பெற நகர சபை நடவடிக்கை

தென்மராட்சி,செப்.23

சாவகச்சேரி நவீன சந்தை மேல்மாடியில் உள்ள கடைகளில் வாடகை செலுத்தப்படாதவற்றை மீளப்பெற சாவகச்சேரி நகரசபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.


யுத்த அனர்த்தங்களின் போது சேதமடைந்த நவீன சந்தைக் கட்டடம் புனரமைக்கப்பட்டது.

அதன் பின்னர் பல கடைகளுக்கு வாடகை செலுத்தப்படவில்லை என்றும் -

அத்தகைய கடைகளின் வாடகை நிலுவையை எதிர்வரும் ஒக்ரோபர் 15ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தவேண்டும் என்றும்-

அவ்வாறு வாடகை நிலுவை செலுத்தப்படாத கடைகளை நகரசபையினர் மீளப் பொறுப்பேற்கவுள்ளதாகவும் செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் அறிவித்துள்ளார். (ஒ-117)

## சீர்பெறுமா திறந்தவெளி அரங்கு?



யாழ்.நகரின் குறியீடுகளில் ஒன்றாகத் திகழ்ந்த திறந்தவெளி அரங்கின் இன்றைய தோற்றத்தையே படத்தில் காண்கிறீர்கள்.

குடாநாட்டுக்கு விஜயம் செய்த புகழ்பெற்ற பிரமுகர்கள் திறந்தவெளி அரங்கில் நடந்த நிகழ்வுகளில் பங்கேற்றுள்ளனர். இங்கு மர்தந்தோறும் நடைபெற்ற 'பௌர்ணமி கலைவிழா' மறக்கமுடியாத ஒன்றாகும்.

யுத்தத்தால் சிதிலமாகி தற்போது புதர்மண்டிக் கிடக்கும் திறந்தவெளி அரங்கை சீர்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டும் என்பதே யாழ். மக்களின் விருப்பமாகும்.

*(படம்: தமிழினியன்)*

## நலன்புரி நிலையத்திற்கு குடிதண்ணீர் விநியோகம்

வலி.தென்மேற்கு,செப்.23

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் மானிப்பாயிலுள்ள தலைமை அலுவலகம் மாதகல் மேற்கு பகுதியில் உள்ள கத்திவெட்டுவான் இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையத்தில் உள்ள மக்களுக்கு பவுஸர் மூலம் குடிதண்ணீரை விநியோகம் செய்து வருகின்றது.

கடந்த 16ஆம் திகதி முதல் குடிதண்ணீர் விநியோகம் இடம்பெற்றுவருவதாகவும், இப்பகுதியிலுள்ள நல்ல குடிதண்ணீர் பெற முடியாத இடங்களுக்கும் குடிதண்ணீரை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் - பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-135)

## மறவன்புலோ விவசாயிகளுக்கு அ.அட்டை வழங்க படையினர் முடிவு

தென்மராட்சி,செப்.23

தென்மராட்சி தெற்கு, மறவன்புலோ பகுதியில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளவுள்ள விவசாயிகளுக்குப் படையினரால் அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது.

அப் பகுதியில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளவுள்ள விவசாயிகள் மூன்று புகைப்படங்களைச் சமர்ப்பிக்குமாறு படையினர் அறிவித்துள்ளனர் என்று அறியவருகிறது. (ஒ)

## இறங்குதுறைப் பாலம் புனரமைப்பு

ஊர்காவற்றுறை,செப்.23

அனலைதீவு மத்திய இறங்கு துறைப் பாலத்தின் புனரமைப்பு பணி தற்பொழுது ஆரம்பமாகியுள்ளது.

இதனால் இந்த இறங்குதுறையூடாக நடைபெற்றுவந்த பயணிகள் போக்குவரத்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு அனலைதீவு தெற்கில் அமைந்துள்ள இறங்கு துறைப் பாலம் ஊடாக இடம்பெற்றுவருகிறது.

இறங்குதுறைப் பாலப் புனரமைப்பு பணி துரிதமாக நடைபெற்றுவருவதால் வேலைகள் யாவும் மாரிகாலம் ஆரம்பமாவதற்கு முன்னர்முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னர் பனைமரங்கள், பலகைகள் கொண்டு அமைக்கப்பட்டிருந்த இப்பாலம் மோசமாகச் சேதமடைந்ததனால் இதனைப் புனரமைப்புச் செய்யுமாறு இப்பிரதேச மக் கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வந் தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-16)

## உள்ளூராட்சி வாரப் போட்டிகள் நல்லூர்ப் பகுதியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.23

நல்லூர் பிரதேசசபையினரால் உள்ளூராட்சி வாரத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட போட்டிகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட சிறந்த உணவகங்களைத் தெரிவுசெய்யும் பணியை கோப்பாய் பொது சுகாதார பரிசோதகர்கள் மேற்கொள்கின்றனர்.

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட சனசமூகநிலையங்களில் சிறந்த மூன்று சனசமூக நிலையங்களை தெரிவுசெய்யும் பணியும் இடம்பெற்று வருகின்றது.

பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படவுள்ள போட்டிப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் வந்து சேர்ந்துள்ளன என்றும் -

இவர்களுக்கான பரீட்சைகள் விரைவில் நடத்தப்படவுள்ளன எனவும்-

நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் பொ. வைரமுத்து தெரிவித்தார்.

இதேவேளை- நல்லூர் பிரதேச செயலகம், நல்லூர் பிரதேசசபை என்பன இணைந்து உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக 'சுற்றுப்புறச் சூழல் முகாமைத்துவமும் மனித சமுதாயத்தின் பொறுப்புகளும்' எனும் தலைப்பினாலான துண்டுப்பிரசுரம் ஒன்றையும் வெளியிட்டுள்ளன. (ஒ-12)

## அறநெறி ஆசிரியருக்கு கருத்தரங்கு

தென்மராட்சி,செப்.23

யாழ்.மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதேசங்களைச் சேர்ந்த அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியருக்கு பயிற்சிக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சிக் கருத்தரங்கு எதிர்வரும் நவம்பர் மாதம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

பயிற்சிக் கருத்தரங்கினை இந்து சமய கலாசார அமைச்சின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினர் நடத்தவுள்ளனர்.

கோப்பாய், பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி, சாவகச்சேரி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கே இப்பயிற்சிக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காகப் பிரதேசங்களில் உள்ள அறநெறிப் பாடசாலைகளின் விவர [illegible]த அனுப்பி வைக்குமாறு இந்து கலாசார அமைச்சின் மாவட்ட இணைப்பாளர் கே.நாகராசா பிரதேச செயலர்களைக் கேட்டுள்ளார்.(ஒ-117)

## கிராமிய கலைப் போட்டி முடிவுகள்

ஊர்காவற்றுறை,செப்.23

தீவகக் கல்வி வலயமும், முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையமும் இணைந்து அண்மையில் வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடத்திய முன்பள்ளி மாணவர்களுக்கிடையிலான கிராமிய கலை நடனப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை செபஸ்தியார் முன்பள்ளி மாணவர்கள் முதலாம் இடத்தினையும், ஊர்காவற்றுறை கியூமெடிக்கா முன்பள்ளி மாணவர்கள் இரண்டாம் இடத்தினையும் வேலணை தொண்டர் திருநாவுக்கரசு முன்பள்ளி மாணவர்கள் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

இதனுடன் வலயமட்ட முன்பள்ளி கண்காட்சியும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-16)

## 17நாள்களில் 57பேருக்கு தென்மராட்சியில் நாய்க்கடி

தென்மராட்சி,செப்.23

இம்மாதத்தின் முதல் 17நாள்களில் 57பேர் விசர்நாய்க்கடிக்கு இலக்காகி சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுள்ளனர். மருத்துவமனைப் பதிவேடு மூலம் இத்தகவல் தெரியவந்துள்ளது.

கடந்த சனிக்கிழமை அன்று மட்டும் இரு மாணவர்கள் உட்பட 4 பேர் விசர்நாய்க் கடிக்கு இலக்காகினர்.

விடத்தற்பளையில் இடம்பெற்ற சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த ஆர்.சிவபாதசுந்தரம் (வயது 55), மோகனதாஸ் சாரங்கள் (வயது 8), ஏ.மயூரன் (வயது 14), கே. கிருபாகரன் (வயது 28) ஆகியோரே விசர் நாயினால் கடியுண்டவர்களாவர்.

இவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (ஒ-117)

## கடமையைப் பொறுப்பேற்காததால் பணி இழந்த ஆசிரியர்கள் மீள் நியமனம்

கடந்த வருடம் தென்னிலங்கையில் உள்ள தேசியப் பாடசாலைகளுக்கு நியமனம் வழங்கப்பட்டு பதவியைப் பொறுப்பேற்றுக் கொள்ளாததால் நியமனம் இரத்துச் செய்யப்பட்ட வடக்கு -கிழக்கைச் சேர்ந்த ஏழு ஆசிரியர்களுக்கும் மீண்டும் நியமனம் வழங்கப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கில் அவர்களது சொந்த மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது

ஆசிரியர் நிர்வாகப் பிரிவுக்கு பொறுப்பான கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.எல். குணவர்த்தன இது தொடர்பான கடிதத்தினை வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சிற்கு அனுப்பிவைத்துள்ளார்.

தேசிய கல்வியல் கல்லூரியில் இருந்து வெளியேறிய ஆசிரியர்களில் உயர்புள்ளி அடிப்படையில் இவர்கள் தென்னிலங்கையில் உள்ள தேசிய பாடசாலைகளுக்கு கடந்த ஆண்டு நியமனம் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-11)

'நிக்கொட்' நிறுவனத்தினால் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு விவசாய உபகரணத்தொகுதிகள் கமநல சேவை நிலைய அலுவலர்களிடம் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் புத்தூர் கமநல சேவை நிலையத்தில் நடைபெற்றது.

இதில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் மற்றும் மாவட்ட கமநல சேவை ஆணையாளர் எஸ்.சுந்தரேசன், 'நிக்கொட்' பணிப்பாளர் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதையும் -

கமநல சேவை நிலையப் பொறுப்பதிகாரிகள் உபகரணத்தொகுதியை கையேற்றுக் கொள்வதையும் படங்களில் காணலாம். *(படம்: அச்சுவேலிச் செய்தியாளர்)*



## சாவகச்சேரி மருத்துவமனைக்கு சிகிச்சை அறை

சாவகச்சேரி மருத்துவமனையின் வெளி நோயாளர் பிரிவில் வைத்திய பரிசோதனை அறை அமைக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் சுமார் 50 ஆயிரம் ரூபா செலவில் இதனை அமைத்துள்ளனர்.

இந்த மருத்துவமனையில் தற்போது மூன்று வைத்தியர்கள் பணிபுரிவதால் ஏற்பட்ட இடநெருக்கடியினையடுத்து இந்த அறை அமைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-117)

## ஓவியக்கண்காட்சிகள்

யாழ்ப்பாணம்,செப்.23

யாழ்.திருமறைக் கலாமன்றம் கொழும்பு விபவி நிறுவனம் மற்றும் யாழ்.திருமறைக் கலாமன்ற ஓவியக் கலைவட்டம் ஆகியவற்றைச் சேர்ந்த ஓவியர்களின் படைப்புகள் அடங்கிய ஓவியக் கண்காட்சியை நடத்தவுள்ளது.

இக்கண்காட்சி இன்றும் நாளையும் முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நக்கா வீதியிலுள்ள கலாமுற்றத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை -

விபவி நிறுவன ஓவியர்கள் நடத்தும் முழுநாள் ஓவியப் பயிலரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது. இதில் பங்குபற்ற விரும்வோர் நாளை சனிக் கிழமைக்கு முன்னர் தமது பெயர்களை யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(ஒ-202)

* *

யாழ்ப்பாணம்,செப்.23

தீவகக் கல்வி வலயம் தீவகப் பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களைக் கொண்ட சித்திரக் கண்காட்சியை நடத்துகிறது.

இக்கண்காட்சி இன்று வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தீவகக் கல்வி வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஸ்ரீ.இராமச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள கண்காட்சி ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. செல்வரத்தினமும் சிறப்பு விருந்தினராக கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப்பணிப்பாளர் அ.ஸ்ரனிஸ்லாஸும் கலந்துகொள்வர்.

(ஒ-202)

### சிறுவர் பிரிவுக்கு இருமாடிக் கட்டடம்

தென்மராட்சி,செப்.23

சாவகச்சேரி மருத்துவமனையில் 2 கோடி ரூபா செலவில் சிறுவர் சிகிச்சைப் பிரிவுக்கு இருமாடிக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

48 படுக்கைகளைக் கொண்ட இக்கட்டடத்தின் கட்டுமானப் பணிக்கு ஜப்பானைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று நிதி உதவி வழங்கவுள்ளது.

சிறுவர் சிகிச்சைப் பிரிவுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு விரைவில் நடைபெறவுள்ளதாகத் தெரியவருகிறது.

மருத்துவமனை வளாகத்தில் நிர்வாக அலகு, ஆண்கள், பெண்கள் சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றுக்கான கட்டட நிர்மாண வேலைகள் 55 மில்லியன் ரூபா செலவில் அமைப்பதற்கான நடவடிக்கைகளை சுகாதாரத் திணைக்களத்தினர் மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

(ப-117)

## மினி பஸ்களில் 'சீஸன் டிக்கெட்'

தென்மராட்சி, செப்.23

தென்மராட்சி தனியார் சிற்றூர்த்திச் சேவைகள் சங்கத்தினர் பயணிகளுக்கு பருவகால பயணச் சீட்டு வழங்கும் திட்டத்தினை விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளனர். முதலில் பாடசாலை மாணவர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு குறைந்த கட்டணத்தில் இத் திட்டத்தினை மேற்கொள்ள ஆலோசிக்கப்பட்டு வருவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஒ-117)

## கூட்டங்கள்

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் எஸ். சிறிமோகனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(ஒ-111-202)

* * *

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் நாளை சனிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் இ.குணநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-202)


## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறையில் வேலாயுதம் மகாவித்தியாலயத்திற்கு வடக்குத் திசையில் உள்ள செட்டித் தெருவில் அமைந்த இரண்டாவது வீடு உடனடி விற்பனைக்குண்டு. வீட்டு உரிமையாளர் உடனடியாக வீட்டை விற்று ஒரு கிழமைக்குள் வெளிநாடு செல்ல இருப்பதால் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: ரவீன்ஸ் ரெலிகொம்
சிங்கத்தின் வீடு
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.
T.P. No.: 021 226 3321
0779112820.

(40244)(21.11)



# பழைய காசோலைகளுக்கு கடைசி வந்தனம்







## 01 ஒக்டோபர் 2005 முதல் புதிய காசோலைகள்

நாடெங்கிலும் உள்ள வர்த்தக வங்கிகள் "பிரதிமை நட்பு" (Image friendly) காசோலைகளை வழங்கத் தொடங்கியுள்ளது. இப் "பிரதிமை நட்பு" காசோலை தீர்வு முறையானது விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த புதிய தீர்வு முறையானது நாட்டின் எப்பகுதியிலிருந்தும் பெறப்படும் காசோலைகளை நாடு பூராவும் உள்ள வாடிக்கையாளர்கள் குறைந்த நேரத்தில் மிக விரைவாக பணமாக்கி கொள்ளலாம்.

உடனடியாக உங்கள் வங்கியிடம் புதிய "பிரதிமை நட்பு" (Image friendly) காசோலைகளைப் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு உங்கள் அன்மையிலுள்ள வங்கிக் கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**முக்கிய கவனத்திற்கு**

'பிரதிமை நட்பு அற்ற' (Non-Image friendly) காசோலைகள் 2005 ஒக்டோபர் 1ம் திகதி தொடக்கம் வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது

Sri Lanka Banks' Association (Guarantee) Limited

இலங்கை மத்திய வங்கி

LANKACLEAR
தேசிய காசோலை தீர்வு இல்லம்

Twin Advertising

# ஆயுதங்களின் துணைகொண்டு பௌத்தத்தை திணிக்குமாறு புத்தபெருமான் கூறவில்லை!

## பேராயர் ஜெபநேசன் சாடுகிறார்

யாழ்ப்பாணம், செப்.23

ஆயுதங்களின் துணைகொண்டு பௌத்தத்தைத் திணிக்குமாறு புத்தபெருமான் கூறவில்லை என்று தென்னிந்திய திருச்சபையின் பேராயர் வண.கலாநிதி எஸ்.ஜெபநேசன் தெரிவித்துள்ளார்.

கொக்குவில் மேற்கு காந்திஜி கிராம புனித அந்திரேயா ஆலயத்தில் தமக்கு அளிக்கப்பட்ட சேவைநலன் பாராட்டு விழாவில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

கடந்த செவ்வாய்க்கிழமை வண. இ.ராஜ்குமார் தலைமையில் இந்த விழா இடம்பெற்றது.

அங்கு பேராயர் மேலும் கூறியதாவது:-

புத்தபிரான் ஆயுத ஆதிக்கக் கருவியாக இன்று இருப்பதைக் கண்டு வேதனைப்படுகின்றேன்.

வீதி எங்கும் - தெரு எங்கும் - புத்தபிரான் சடுதியாகத் தோன்றியிருக்கிறார்; அகல மறுக்கின்றார்; இருந்த இடத்திலேயே இருக்கின்றார்.

புத்தபிரானை வைத்து ஆன்மீகத்தை ஆயுதக் கருவியாகப் பயன்படுத்துவது மிக்க வேதனையைத் தருகின்றது.

புத்தபிரானைச் சிங்கள மக்கள் அறியும் முன்பே தமிழர்கள் அறிந்திருக்கின்றனர். எமது தமிழ் நூல்களைப் பார்க்கும்போது, மணிமேகலை என்ற காவியமும் வீரசோழியம் என்ற இலக்கண நூலும் சுந்தரதேசிகன் என்ற காவியமும் புத்தசமயக் காவியங்கள், புத்தசமயப் புலவர்கள் எழுதி வைத்தவை.

அவர்கள் ஆன்மீகத்தை மதித்து, அதனைப் பின்பற்றுபவர்களாக இருந்தனர். அவர்கள் ஆயுதங்களின் உதவியுடன் புத்தசமயத்தைத் திணிக்கவில்லை.

ஆனால், இன்று ஆயுதங்களின் துணைகொண்டு விரும்பாத இடங்களிலும் ஆளில்லாத் தெருக்களிலும் புத்தர் சிலை வைக்கப்படுகின்றது.



'ஆசையைத் தள்ளி விடுங்கள்' என்றே புத்தர் சொன்னார். ஆயுதங்களைப் புத்தசமயத்தைத் திணிக்கும் கருவியாகப் பயன்படுத்தும்படி அவர் கூறவில்லை.

கிழக்கில் தொடங்கிய திணிப்புப்படலம் சுன்னாகம் வரைக்கும் வந்துள்ளது. நிச்சயமாக புத்தர்பெருமான் இருந்திருந்தால் இதனைக்கண்டு வேதனைப்பட்டிருப்பார்- என்றார் அவர். (அ-ஒ-3)

# "லான்ட் மாஸ்டர்" விபத்தில் சாரதி காயம்!


தென்மராட்சி,செப்.23

வேகமாக வந்த 'லான்ட் மாஸ்டர்' கட்டுப்பாட்டினை இழந்து வீதியைவிட்டு விலகி வேலியை உடைத்துக்கொண்டு வளவுக்குள் சென்றது. அதனால் வேலித் தகரம் வெட்டி சாரதி காயமடைந்தார்.


சாவகச்சேரி, கச்சாய் வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்நத மா.தேவராசா (வயது46) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (ப-117)

# தெய்வீக ஸ்தலங்களில்



சங்கானை மாவடி ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் இறுதிநாளன்று வைரவப் பெருமான் பூந்தண்டிகையில் வீதியுலா வந்தபோது எடுக்கப்பட்ட படம். (எ)



சாவகச்சேரி கோயில்குடியிருப்பு சந்தனமுதலிச்சிபுலம் முருகமூர்த்தி ஆலய வருடாந்த தேர்த்திருவிழாவன்று முருகப்பெருமான் தேரில் எழுந்தருளி வீதிவலம் வந்தபோது எடுக்கப்பட்ட படம்.

(படம்:தென்மராட்சிச் செய்தியாளர்)

# எரிபொருள் நிலையக் கட்டடத்தின் நிர்மாணப் பணியைப் பரிசீலனை செய்க!

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. கோரிக்கை

யாழ். முற்றவெளிப் பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையக் கட்டடத்தின் உருவமைப்பை மீள்பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் சம்பந்தமான கடிதம் ஒன்றை தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஜி.கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜாலிய மெதகமேக்கு அனுப்பிவைத்துள்ளார்.

கட்டட உருவமைப்புப் போதிய திருப்தி தராத பட்சத்தில் அதனை மீள்பரிசீலனை செய்து உரிய முறையில் புதிய கட்டடத்தை அமைப்பதற்கு ஆவனசெய்யுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

இதற்கென ஒதுக்கப்பட்ட நிதியை விரயமின்றி அதிஉச்சமான முறையில் பயன்படுத்த வேண்டும். அதற்கமைய கட்டட உருவமைப்பைக் காலம் தாழ்த்தாது மீள்பரிசீலனை செய்வதோடு தங்களை விசேட பிரதிநிதி ஒருவரைக் குறித்த இடத்திற்கு அனுப்பி நிலைமைகளை மதிப்பீடு செய்யுமாறும் கேட்டுக்கொள்கின்றேன் என்று அக்கடிதத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேட்டுள்ளார். (ஐ-17)

# வாசகர் திருமுகம்

## ஜனாதிபதி வேட்பாளர்களிடம் ஒரு பொதுமகனின் கோரிக்கை

வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவிருக்கும் இருபெரும் கட்சிகளின் வேட்பாளர்களும் நமது மக்களின் வாக்குகளை கேட்டு வரப்போகிறார்கள்.

எங்கள் தரப்பில் பின்வரும் அம்சங்களை கவனத்தில் எடுக்கவேண்டும் என்று ஒரு பொதுமகன் என்றமுறையில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பதவிக்கு வந்ததும் முதல் நடவடிக்கையாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசி பாதுகாப்பு வலயங்களில் இராணுவ நிலையங்களுக்கு 600 மீற்றருக்கு மேற்படாத பகுதியை மட்டும் வைத்துக்கொண்டு மிகுதிப் பகுதிகளில் மக்கள் குடியேறுவதற்கு அனுமதி வழங்க முன்வரவேண்டும். இதில் கடற்கரைப் பகுதிகளும் உள்ளடக்கப்படுவதுடன் ஒருமாத காலத்துக்குள் நிறைவேற்றப்பட வேண்டும்.

ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தன்னாட்சி நகர்வின் அடிப்படையில் பேச்சுகளை உடனடியாகத் தொடங்கி கூடியவரை தொடர்ச்சியாக நடத்தி குறிப்பிட்ட காலத்துக்குள் தீர்வு கண்டு நடைமுறைப்படுத்தவேண்டும். அதே மூச்சில் நிரந்தரத் தீர்வுக்கான பேச்சுகள் தொடங்கப்படவேண்டும். இந்த விடயங்கள் வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் இடம்பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே அதன் முடிவு மக்கள் ஆணையாக அமையமுடியும்.

திருநெல்வேலி வடக்கு. கா.கணேசரட்ணம்

## பதில் அதிபர்களுக்கு நியமனம் போட்டிப் பரீட்சை மூலமா?

தற்பொழுது பதில் கடமையாற்றும் அதிபர்கள் போட்டிப் பரீட்சை ஒன்றின் மூலமே நிரந்தர அதிபர் சேவையில் சேர்த்துக் கொள் ளப்படுவார்கள் என்ற செய்தியொன்று பத்திரிகையில் வெளியாகியிருந்தது. பொது நிர்வாக சேவைகள் அமைச்சு எடுத்த இம்முடிவானது எத்தனையோ பின் தங்கிய பாடசாலைகளில் பதில் கடமையாற்றிவரும அதிபர்களை உளத்தாக்கத்திற்குள்ளாக்கியுள்ளது. ஏனெனின், இதுவரை காலமும் இவர்களது சேவைக்காலத்தைக் கவனத்திற்கொண்டே இவர்கள் நிரந்தர அதிபர் சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். இம்முடிவு வழமைக்கு மாறானதாகும். அத்தோடு, உரிய காலத்தில் போட்டிப் பரீட்சை நடத்தப்படாதது அரசின் தவறாகும்.

மேலும் போர்க்காலச் சூழ்நிலையிலும் போக்குவரத்துத் துண்டிக்கப்பட்ட நிலையிலும் எத்தனையோ இடர்பாடுகளுக்கு மத்தியிலும் பதில் கடமையாற்றும் அதிபர்களின் அரிய சேவையால்தான் எத்தனையோ கஷ்ட, அதிகஷ்டப் பாடசாலைகள் தொடர்ந்தும் தமது கல்விச் செயற்பாட்டினை முன்னெடுத்துள்ளன; முன்னெடுத்துவருகின்றன. தற்போது கூட இவர்களது சேவையால்தான் எத்தனையோ பின் தங்கிய பாடசாலைகள் வறிய பிள்ளைகளுக்கு கல்விப் பணியைச் செய்துவருகின்றன என்றால் மிகையாகாது. எனவே, இவர்களது கல்விப்பணியை மதித்து உடன் இவர்களை நிரந்தர அதிபர் சேவையில் சேர்த்துக் கொள்வதற்குக் கல்வித்திணைக்கள அதிகாரிகளும், ஆசிரிய சங்கப் பிரதிநிதிகளும் உரிய அழுத்தத்தினை அரசிற்குக் கொடுக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

- முருகேந்திரன்.

# கையிலுள்ள ஐந்து விரல்களுக்குள் ஒரு தர்க்கம்

கட்டை விரல் சொல்லிற்று 'நாம் ஐவருக்குள் நான்தான் மேல். என் பிடிமானமில்லாமல் உங்களால் ஒன்றுமே செய்ய முடியாது'

அடுத்த சுட்டுவிரல் கோபத்துடன் எழுந்தது. 'எதையும் யாரையும் சுட்டிக் காட்ட வேண்டுமென்றாலும் என்னைத் தான் உபயோகிப்பார்கள்; அதனால் நான் தான் மேல் என்றது.

உடனே நடுவிரல் கம்பீரமாக எழுந்தது.

'எனக்கு இரண்டு பக்கத்திலும் நிற்கின்றீர்கள். என் கம்பீரத்திற்கு ஈடாகுமா? நட்ட நடுவில் நான் பிரதானமாக இருக்கிறேன். என்னைவிட நீங்கள் நால்வரும் மட்டம் தான் என்றது.

அடுத்தாற்போல் மோதிரவிரல் பெருமையுடன் எழுந்தது. 'தங்கமோ, வைரமோ மோதிரம் போட்டு என்னைத் தான் பெருமைப்படுத்துகிறார்கள். அதனால், அந்தஸ்த்தில் நான்தான் மிகவும் உயர்ந்தவன்' எல்லா விரல்களும் சுண்டு விரலை அலட்சியமாகப் பார்த்தன.

'சுண்டு விரல் வருத்தத்துடன் 'பகவானே என்னை மட்டும் எந்தப் பெருமையும் இல்லாமல் படைத்து விட்டாயே. நான் என்ன பாவம் செய்தேன்? என்று

ஞானக்கதிர்

முறையிட்டது. கடவுள் சுண்டுவிரலின் காதில் ஏதோ சொன்னார். உடனே சுண்டு விரல் 'உங்கள் எல்லோரையும்விட பக்தியில் நான் மிகவும் உயர்ந்தவன். கடவுள் முன்னால் கைகூப்பும்போது கடவுள் எதிரில் நான் தான் முதலில் நிற்கின்றேன். எனக்குப் பின்னால் தான் நீங்கள் எல்லோரும் நிற்கவேண்டும். இந்தத் தகுதியே எனக்கு மிகப் பெரிய பாக்கியம்' என்று பணிவோடு சொல்லிற்று. மற்ற நான்கு விரல்களும் தங்கள் நிலை அறிந்து தலை குனிந்தன.

நன்றி: பக்திமலர்

## ஆன்மீகச் சொற்பொழிவுகள்

வடமராட்சி,செப்.23

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயிலின் வடகிழக்கு மூலையிலுள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நடைபெற்றுவரும் வாராந்த ஆன்மீகச் சொற்பொழிவு வரிசையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு "ஆழ்வார்கள் காட்டிய அன்புநெறி" எனும் தலைப்பில் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி அதிபர் அ.விஜயநாதன் சொற்பொழிவு நிகழ்த்துவார். (த-173)

♦♦♦♦♦

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வாரந்தோறும் நடத்தி வரும் ஆன்மீக நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் "பெரிய புராணம்" எனும் தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்துவார். (த-173)

## பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் சுகாதாரக் கண்காட்சி

வடமராட்சி,செப்.23

பருத்தித்துறை அரசின் ஆதார வைத்திய சாலையில் பரிசாரகர் பயிற்சியை மேற்கொண்டுள்ள மாணவர்களால் கடந்த செவ்வாய்க் கிழமை வைத்தியசாலை சிகிச்சைப்பிரிவு (கிளினிக்) மண்டபத்தில் சுகாதாரக் கண்காட்சி நடத்தப்பட்டது.

இந்தககண்காட்சியை வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் கதிரவேற்பிள்ளை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார். துறைசார்ந்த பிரதம தாதிய போதனாசிரியர்களான எஸ்.செல்வராஜா திருமதிகள் தெ.கணபதிப்பிள்ளை, பா.பரஞ்சோதி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தக்கண்காட்சியை யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் பாாவையிட்டு திருபதி தெரிவித்தார். பொது மக்கள் பல்வேறு நோய்கள் வராமல் தடுக்கவேண்டிய ஆரம்ப சுகாதாரம் தொடர்பாக விளக்கமளிக்கும் வகையில் கண்காட்சி அமைந்திருந்தது. (த-173)

### போட்டோப் பிரதி இயந்திரம் அன்பளிப்பு

குருநகர்,செப்.23

ஐ.ஓ.எம்.நிறுவனம் குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்திற்கு போட்டோப் பிரதி இயந்திரம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

ஐ.ஓ.எம். நிறுவனப் பிரதிநிதி எஸ்.உதயகுமார் இந்த இயந்திரத்தை அண்மையில் மேற்படி பணிமனையில் ஒப்படைத்தார். இந்த நிகழ்வில் குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தை வண.பிதா ஆர்.எச். சகாயநாயகம்அடிகளார் வண.பிதா ஆர்.பி.ஜெயசேகரம் அடிகளார் ஆகியோர் கலந்துகொண்டனர். (த-51)


விராட்விஸ்வப் பிரம்மனே நமஹ

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17 - 05 - 1932 | 02 - 09 - 2005 |

அமரர்

### சின்னையா தர்மலிங்கம்

கடந்த 02-09-2005 அன்று சிவபதமெய்திய எங்கள் குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கு எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

23-09-2005 வெள்ளிக்கிழமை பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

நீர்வேலி மத்தி, நீர்வேலி.

(40257)(50-45-15)



ஓம் ஸ்ரீ ராம ஜெயம்

யாழ்ப்பாணம்-வண்ணை

## ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

## மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2005

### மஹோற்சவ விவரங்கள்

புரட்டாதி 16 ஆம் நாள் (02-10-2005) ஆதிவாரம்
- மாலை 4மணிக்கு கர்மாரம்பம், அனுக்ஞை, சாந்தி வழிபாடு

புரட்டாதி 17 ஆம் நாள் (03-10-2005) சோமவாரம்
- முற்பகல் 10.15 மணி கொடியேற்றம் (துவஜாரோகணம்)
சூரிய பிரபைச் சேவை, மாலை மஹாயாகாரம்பம் அன்னச்சேவை

புரட்டாதி 18 ஆம் நாள் (04-10-2005) மங்கள வாரம்
- காலை கேடகம் (நவராத்திரி விரதாரம்பம்)
மாலை சேஷ சயனச்சேவை

புரட்டாதி 19 ஆம் நாள் (05-10-2005) புதவாரம் - காலை கேடகம், மாலை கருடசேவை

புரட்டாதி 20 ஆம் நாள் (06-10-2005) குருவாரம் - காலை கேடகம், மாலை அனுமச்சேவை

புரட்டாதி 21 ஆம் நாள் (07-10-2005) சுக்கிரவாரம் - காலை கேடகம், மாலை பூந்தண்டிகைச்சேவை

புரட்டாதி 22 ஆம் நாள் (08-10-2005) சனிவாரம் - காலை கருடசேவை, மாலை கஜேந்திரசேவை

புரட்டாதி 23 ஆம் நாள் (09-10-2005) ஆதிவாரம் - காலை கேடகம், மாலை சப்பரம்
(வெண்ணெய் தாளிச்சேவை)

புரட்டாதி 24 ஆம் நாள் (10-10-2005) சோமவாரம் - காலை கருடசேவை, மாலை அஸ்வசேவை

புரட்டாதி 25 ஆம் நாள் (11-10-2005) மங்களவாரம் - காலை 8 மணி வசந்தமண்டபப் பூஜை
முற்பகல் 10 மணி இரதோற்சவம்
நண்பகல் 12 மணி இரதவரோகணம்
நண்பகல் 12.30 மணி மஹா ஆசீர்வாதம் , மாலை கருடசேவை

புரட்டாதி 26 ஆம் நாள் (12-10-2005) புதவாரம் - காலை 7.30 மணி வசந்தமண்டபப் பூஜை,
காலை 9 மணி சந்திரபுஷ்கரணியில்
தீர்த்தோற்சவம், திருவோண தீபபூஜை,
மஹாயாக கும்பாபிஷேகம், விஜயதசமி மானம்பூ உற்சவம்
மாலை துவஜாவரோகணம், சந்திர பிறைச்சேவை.

புரட்டாதி 27 ஆம் நாள் (13-10-2005) குருவாரம் - காலை காசி யாத்திரை நிச்சயதார்த்தம்,
மாலை திருக்கல்யாணம், பூந்தண்டிச்சேவை

புரட்டாதி 28 ஆம் நாள் (14-10-2005) சுக்கிரவாரம் - மாலை திருவூஞ்சல், பூந்தொட்டிச்சேவை

புரட்டாதி 29 ஆம் நாள் (15-10-2005) சனிவாரம் - காலை கருடசேவை, மாலை கருடசேவை

புரட்டாதி 30 ஆம் நாள் (16-10-2005) ஆதிவாரம் - மாலை வதிரி விருஷயோகநாராயண உற்சவம

புரட்டாதி 31 ஆம் நாள் (17-10-2005) சோமவாரம் - காலை மஹாலக்ஷமி அபிஷேகம்
மாலை சுமங்கலித் தீபபூஜை, உற்சவம்

ஐப்பசி 01 ஆம் நாள் (18-10-2005) மங்களவாரம் - காலை பிராயச்சித்த அபிஷேகம், வாகன பூஜை,
மாலை ஸ்ரீ ஆஞ்சனேயர் அபிஷேகம், பொங்கல், உற்சவம்.

| முற்பகல் | பிற்பகல் |
|---|---|
| காலை சந்தி பூஜை: 9 மணி | சாயரட்சை பூஜை: 3.30 மணி |
| ஸ்தம்ப பூஜை: 9.30 மணி | இரண்டாம் காலப்பூஜை: 3.45 மணி |
| வசந்தமண்டபப் பூஜை:10.15 மணி | ஸ்தம்ப பூஜை: 4.30 மணி |
| | வசந்தமண்டபப் பூஜை: 5.15 மணி |

(பழைய நேரப்படி நடைபெறும்)

ஆதீன மஹாசபை,
யாழ்.வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள்
தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.

(C/45097)(50-45-15)



## பன்னிரு திங்கள் நிறைவுப் பிரார்த்தனை

## திருமதி தங்கம்மா வயிரமுத்து

மலர்வு 20.04.1932 உதிர்வு 04.10.2004

திதி: 23.09.2005



முந்தித் தவமிருந்து முந்நூறு நாள் சுமந்து
எம் தாய் வடிவில் எம்முன் நடைபயின்று
சந்தோஷ வாருதியாய் சகலமும் தானே என்று
நின்றாயே தாயே! நீ எங்கே நீ எங்கே!

ஓராண்டு காலம் ஓடி மறைந்ததம்மா!
நூறாண்டு வாழ்வதற்காய் பூமியிலே உதித்தவளே!
நீருண்ட மேகமென எம்விழிகள் மழை பொழிய
கூறுண்ட இதயமென எமைப்பிரிந்து ஏன் மறைந்தாய்?

வந்து எம் அருகே வாழ்ந்திருப்பாய் என்றெண்ணி
வந்து உன் வாசலிலே காத்திருக்கும் எமையெல்லாம்
என்று நீ பிறந்து இருவிழிகள் தான் மலர்ந்து
நின்று நிமிர்ந்து எங்கள் கண்ணெதிரே தோன்றிடுவாய்!

போதும் துயரமழை புத்தாய்ப் பிறந்துவிடு!
மோதும் புயற் காற்றை மோதி அழித்துவிடு!
வீசும் தென்றலிலே விந்தையென மலர்ந்துவிடு!
பேசும் எம் மொழியில் பெற்றவளே எழுந்துவிடு!

*தற்போதைய முகவரி:*
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.
*நிரந்தர வதிவிடம்:*
'உதயவாசம்'
மாவிட்டபுரம் வீதி, கீரிமலை.

உங்கள் பிரிவால் துயறுரும்
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(40297)(51-15-34)

## 'றீற்றா' சூறாவளியின் அபாயம்

# டெக்ஸாஸ், லூசியானா பகுதிகளில் அவசர கால நிலைமை பிரகடனம்

நியூயோர்க், செப்.23

அமெரிக்காவில் 'றீற்றா' சூறாவளியின் அபாயம் காரணமாக 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் மெக்ஸிக்கோ குடாப் பகுதியிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

டெக்ஸாஸிலும் மோசமானதொரு தாக்கம் ஏற்படலாம் என்ற செய்தி வெளியானதையடுத்து அங்கிருக்கும் மக்கள் அச்சத்தில் மூழ்கியுள்ளனர்.

'றீற்றா' என்ற சூறாவளி மணிக்கு 165 மைல் வேகத்தில் டெக்ஸாஸை நோக்கி நகர்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டெக்ஸாஸைத் தாக்கும் சக்திமிக்க சூறாவளியாக இது இருக்கலாம் என்றும் அமெரிக்கப் பெருநிலத்தில் வீசும் மிகமோசமான சூறாவளியாக இது காணப்படும் எனவும் கால நிலை ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதனால் டெக்ஸாஸ் மற்றும் லூசியானா பகுதிகளில் அவசரகால நிலையை அதிபர் புஷ் பிரகடனப்படுத்தியுள்ளார்.

மக்களை இடம்பெயர்வதற்கான உத்தரவுகளுக்கு உடன்படுமாறு கேட்டுக்கொண்டுள்ள அதிபர், 'றீற்றர்' மோசமானவிளைவுகளை ஏற்படுத்தாது என்று நம்புகின்றோம்-பிரார்த்திக்கின்றோம். ஆனால் மோசமான விளைவுகளை எதிர்கொள்ளவும் தயாராய் இருக்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.


சூறாவளியில் அகப்பட்ட ஒருரைக் காப்பாற்றும் மீட்புப் பணியாளர்.

மெக்ஸிக்கோ குடாப் பகுதியில் 70 வீதம் எண்ணெய் உற்பத்தி நிறுத்தப்பட்டுவிட்டதாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

அமெரிக்க விண்வெளி ஆய்வு நிலையமான 'நாஸா' ஹுஸ்டனில் உள்ள தனது விண்வெளி நிலையத்தை மூடிவிட்டதாக அறிவித்துள்ளது. சர்வதேச விண்வெளிக் கட்டுப்பாட்டு நிலையத்தை ரஷ்யாவுக்கு இடமாற்றியிருப்பதாகவும் அது அறிவித்துள்ளது.

'கத்தரீனா' சூறாவளியின் போது மெத்தனமாக இருந்துவிட்டார்கள் எனக் கண்டனத்துக்குள்ளாகியிருந்த அரச அதிகாரிகள், அவசரகால ஊழியர்கள் மற்றும் மருத்துவ அணியினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

மெக்சிக்கோ கரையோரம் முழுவதும் அவசர முன் ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ப-8)

### ஐ.நா பாதுகாப்புச் சபையில் பதவி; போட்டியிட இஸ்ரேல் தயார்

ஐ.நா.செப்.23

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் தற்காலிக உறுப்பினர் பதவிக்குப் போட்டியிட இஸ்ரேல் திட்டமிட்டுள்ளது. ஐ.நா வரலாற்றில் பாது காப்புச் சபையில் தற்காலிக உறுப்பினர் பத விக்கு இஸ்ரேல் போட்டியிடவுள்ளது. இதுவே முதல் முறை.

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் கடந்த 20ஆம்திகதி உரை நிகழ்த்திய இஸ்ரேல் துணைப் பிரதமர் சில்வன் ஷலோம் கூறியதாவது:-

ஐக்கிய நாடுகள் அமைப்பில் முக்கிய முடிவு எடுக்கும் சக்தி வாய்ந்த அமைப்பாகப் பாதுகாப்புச் சபை உள்ளது. அந்தச் சபையில் இஸ்ரேல் இடம்பெறுவதன் மூலம் எங்கள் நாட்டுக்குரிய சரியான இடத்தைப் பெறமுடியும். அமைப்பின் முழுமையான மற்றும் சமமான உரிமைகளை நாங்கள் பெறமுடியும். அதனால், பாதுகாப்புச் சபை தற்காலிக உறுப்பினர் பதவிக்கு நாங்கள் போட்டியிட திட்டமிட்டுள்ளோம்.

ஐ.நா.பொதுச்சபையின் துணைத் தலைவராக முதன்முதலாக இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். (8)

### லண்டன் குண்டுவெடிப்பு: ஒத்திகை பார்த்த பயங்கரவாதிகள்

லண்டனில் குண்டுவெடிப்பை நிகழ்த்திய பயங்கரவாதிகள், அதற்கு முன்னர் ஒத்திகை பார்த்திருப்பது தெரியவந்துள்ளது.

குண்டுவெடிப்புக்கு 9 நாள்களுக்கு முன்பு அவர்கள் இந்த ஒத்திகையில் ஈடுபட்டதாக, துப்பறியும் நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர். ரயில் நிலையங்களில் கண்காணிப்புக் கமெராக்களில் பதிவான காட்சிகளை ஆயிரக்கணக்கான மணிநேரம் ஆய்வு செய்த பிறகு, நிபுணர்கள் இதைக் கண்டுபிடித்துள்ள னர். இந்தக் காட்சிகளைப் பொலீஸார் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்டனர்.

ஜூலை 7 ஆம் திகதி நடந்த லண்டன் தொடர் குண்டுவெடிப்புகளில் 52 பேர் பலியானார்கள். தற்கொலைப் படையாகச் செயற்பட்ட 4 பயங்கரவாதிகளும் பலியானார்கள். அவர்களில் முகமது சித்திக் தான், லெஸாத் தன்வீர், ஜெர்மைன் லிண்ட்சே ஆகியோர், ஜுன் 28 ஆம் திகதி குண்டுவெடிப்புக்கு ஒத்திகை பார்த்துள்ளனர்.

பயங்கரவாதிகள் தங்கியிருந்த வீடுகளில் கிடைத்த ரயில் ரிக்கெட்டுகள் மற்றும் சிட்டைகள் மூலம் அவர்கள் அந்தத் திகதியில் ரயில் நிலையத்துக்குச் சென்றது தெரியவந்தது. அதன்பிறகு, அன்றைய தினம் ரயில் நிலையத்தில் கண்காணிப்புக் கமெராவில் பதிவான காட்சிகளைத் திரும்பத் திரும்பப் போட்டுப் பார்த்த போது அவர்கள் ஒத்திகை பார்த்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (8)

# ஆப்கான் தேர்தல் யு.எஸ்ஸின் நாடகம்

# புனிதப் போர் மீண்டும் தொடங்கும்!

## தலிபான் தீவிரவாதிகள் எச்சரிக்கை

காபூல்,செப்.23

**'ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற தேர்தல் அமெரிக்கா(யு.எஸ்.) நடத்திய நாடகம். ஆப்கானில் உள்ள வெளி நாட்டுப் படைகளுக்கு எதிராக புனிதப்போர் மீண்டும் தொடங்கும்' என தலிபான் தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகளின் பாதுகாப்போடும், ஐ.நா. தேர்தல் பார்வையாளர்கள், கண்காணிப்போடும் கடந்த ஞாயிறன்று நாடாளுமன்றத் தேர்தல் நடந்தது. வாக்காளர் பட்டியலில் மொத்தம் 120 கோடி வாக்காளர்களில் அரைவாசிப் பேர் வாக்களித் ததாக ஐ.நா. தெரிவித்தது.

இந்தத் தகவலை மறுத்துள்ள தலிபான் தீவிரவாதிகள், அமெரிக்கா நடத்திய தேர்தல் நாடகத்தை மக்கள் புறக்கணித்து விட்டனர். வெளிநாட்டுப் படைகளை விரட்டும் புனிதப் போரில் தலிபான் அமைப்பு ஈடுபடும் என்று அறிவித்துள்ளனர்.

இதுகுறித்து தலிபான் செய்தித் தொடர்பாளர் அப்துல் லத்தீப் ஹக்கீம் கூறியதாவது:-

ஆப்கானில் உள்ள மொத்த வாக்காளர்கள் மூன்று கோடி பேர். அதில் 15 சதவீதத்தினர் அதாவது 40 லட்சம் மக்கள் மட்டுமே வாக்களித்தனர். இதன் மூலமாக, ஆப்கான் மக்கள் அமெரிக்கா நடத்திய தேர்தல் நாடகத்தைப் புறக்கணித்துவிட்டனர் என்பது தெளிவாகிறது.

ஆப்கானில் அமையவுள்ள நாடாளுமன்றம் அமெரிக்காவின் துணை அமைப்பாகச் செயற்படும். அது ஆப்கான் மக்களின் பிரதிநிதித்துவ சபையாக இருக்காது. ஆப்கானில் இருந்து வெளிநாட்டுப் படைகளின் கடைசி துருப்பு வெளியேறும் வரை எங்களது புனிதப்போர் தொடரும். தலிபான் வலுவாக உள்ளது.

கடந்த ஒரு மாதத்தில் மட்டும் தேர்தலுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த பொதுமக்கள் 1000 பேர் கொல்லப்பட்டனர். ஆப்கானின் கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் நடந்த அமெரிக்க விமானப்படை தாக்குதலில் பொது மக்கள் ஏராளமானோர் இறந்தனர்.

- இவ்வாறு ஹக்கீம் தெரிவித்தார்.

அமெரிக்காவில் நடந்த '2001 செப்ரெம்பர் 11' தாக்குதலைத் தொடர்ந்து, பின்லேடனைப் பிடிப்பதற்காக ஆப்கான் மீது அமெரிக்கா படையெடுத்தது. இந்நிலையில், தலிபானின் போர் அறிவிப்புக்குப் பின்லேடனின் அல்கெய்டா அமைப்பு ஆதரவு தெரிவித்துள்ளது.

பின்லேடனின் உதவியாளர் அல்-ஜவகிரி, 'ஆப்கானில் நடந்த தேர்தல் கேலிக் கூத்தானது.தலிபானின் வலுவான நடவடிக் கையில் அமெரிக்கப் படையின் அத்திபாரம் தகர்க்கப்படும்' என்று எச்சரித்துள்ளார். (8)

### வென்ற பட்டத்தை திருப்பிக்கொடுத்தார் ஆஸி.அழகி


கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு, ஆஸ்திரேலியாவில் நடந்த 'மிஸ்' தாய்லாந்து அழகிப் போட்டியில் கலந்துகொண்டு 'மிஸ் தாய்லாந்து' பட்டத்தை வென்ற ஏஞ்சல் மெக் தனது பட்டத்தை திருப்பிக் கொடுத்துள்ளார்.

தாய்லாந்து அழகியாகப் பட்டம் வென்று 10 தினங்களே ஆன நிலையில் தனது பட்டத்தையும், அதனுடன் பரிசுத் தொகையான 10 லட்சத்து 30 ஆயிரம் இந்திய ரூபாவையும் எட்டு லட்சத்து 23 ஆயிரம் இந்திய ரூபா மதிப்புள்ள வைரக் கிரீடத்தையும் ஒரு காரையும் திருப்பிக் கொடுத்து விட்டார்.

இதுகுறித்து மெக்கே கூறுகையில், 'தாய்லாந்து மொழி எப்படி பேசுவது என்பதைக் கற்க விரும்பியும், தாய்லாந்து நாட்டின் கலாசாரத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளும் ஆர்வத்துடனும் இந்தப் போட்டியில் பங்கேற்றேன். ஆனால், நான் வெற்றி பெறுவேன் என எதிர்பார்க்கவில்லை. நான் வெற்றி பெற்றதை நினைத்தால் எனக்கு மிகவும் வியப்பாக இருக்கிறது' என்றார்.

இதைத் தொடர்ந்து 'மிஸ் தாய்லாந்து' பட்டப் போட்டியின்போது இரண்டாவது இடத்தைப் பிடித்தபூரீண்டாஜென்சனுக்குப்போகிறது. (8)

# மெக்ஸிக்கன் பாதுகாப்பு அமைச்சர் உட்பட ஒன்பது பேர் ஹெலிகொப்டர் விபத்தில் பலி!



மெக்ஸிக்கோ,செப்.23

மெக்ஸிக்கன் குடியரசின் பொதுசனப் பாதுகாப்பு அமைச்சரும் அந்நாட்டு ஜனாதிபதிக்கு நெருக்கமானவரும் போதைவஸ்து கடத்தலுக்கு எதிரான நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவருமான அமைச்சர் ரமொன் மாட்டீன் ஹுரேற்றா ஹெலிகொப்டர் விபத்தொன்றில் கொல்லப்பட்டார்.

மெக்ஸிக்கோ சிற்றிக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தக் ஹெலி விபத்தில் பலியான 9 பேரில் அமைச்சரும் ஒருவர்.

மலைப்பிரதேசம் ஒன்றில் ஹெலிகொப்டர் விழுந்து நொருங்கியுள்ளதாக மெக்ஸிக்கன் ஜனாதிபதி விஸ்சென்ற் பொக்ஸ் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களில் ஒருவர் சமஷ்டி பொலீஸ்துறையின் தலைவர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்த அமைச்சர் அங்குள்ள மிக முக்கிய சிறைச்சாலையொன்றைப் பார்வையிடுவதற்காகச் சென்ற சமயமே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

போதை வஸ்துக் கடத்தலைக் கட்டுப்படுத்துவதற்காக மெக்ஸிக்கன் அரசு மூலம் கொண்டுவரும் தீவிர நடவடிக்கைகளுக்கு அமைச்சர் மாட்டீனின் மரணம் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமது கடமை நேரத்தில் உயிரிழந்த இவர்கள் அனைவரையும் 'வீரர்கள்' என ஜனாதிபதி வின்சென்ற் அறிவித்துள்ளார். (ப-8)

# காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக இணக்கமான முறையில் பேச்சு

## பாக். வெளியுறவு அமைச்சர் யோசனை



கடுமையையும் கண்டிப்பையும் விடுத்து இணக்கமான முறையில் காஷ்மீர் பிரச்சினை குறித்து பேச்சு நடத்தவேண்டும் என்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குர்ஷித் கசூரி தெரிவித்தார்.

''இஸ்லாமிய மாநாட்டு கூட்டமைப்பு'' சார்பில் இஸ்லாமிய நாடுகளின் பிரதிநிதிகளின் கூட்டம் அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குர்ஷித் கசூரி பேசியதாவது:-

காஷ்மீர் பிரச்சினை இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையிலான முக்கிய பிரச்சினை. இந்தப் பிரச்சினையை தீர்க்காவிட்டால் துணைக்கண்டப் பகுதியில் அமைதியைக் காண முடியாது. இந்த விடயத்தில் அர்த்தமுள்ள, உறுதியான மற்றும் தீர்வுகாணும்படியான பேச்சு நடத்தவேண்டும் எனப் பாகிஸ்தான் விரும்புகிறது.

இரு நாடுகளுக்கு இடையில் பதற்றத்தைத் தணித்து அமைதியை நிலைநாட்ட வேண்டுமெனில், காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படவேண்டும் என்பதைக் கடந்த கால நிகழ்வுகள் உணர்த்தியுள்ளன.

காஷ்மீர் பிரச்சினை குறித்த பேச்சுகளில் கடுமையையும் கண்டிப்பையும் விடுத்து இணக்கமான விட்டுக்கொடுக்கும் தன்மையுடன் இரண்டு நாடுகளும் நடந்துகொள்ளவேண்டும். இந்தியா, பாகிஸ்தான் நாடுகள் ஏற்றுக்கொள்ளும் தீர்வு, காஷ்மீர் மக்களின் விருப்பத்தையும் நிறைவு செய்வதாக இருப்பது அவசியம் என்றார். (8)




# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள மிட்சுபிசி கெலன் (யப்பான்) 9 சிறி தொடர் இலக்கமுடைய கார் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி. (40331)

## காணி விற்பனைக்கு

விக்கினேஸ்வரா வீதி, கரவெட்டி மேற்கில் வீட்டுடன்கூடிய 6¼ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P.: 011 2695093.(40306)

## ஜோதிடம்

கைரேகை, ஜாதகம் கொண்டு உங்களின் எதிர்காலப் பலன்களை அறிந்து கொள்ளவும் உங்கள் வாழ்வில் வெற்றி பெறவும் ஆலோசனை பெற்றுக்கொள்ளவும் ஒரு முறை நாடுங்கள் இந்திய பரம்பரை ஜோதிடர் அருள்வாக்கு அம்பிகா அம்மா, 121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (40196)

## தவறிவிட்டது

காளிகோயிலடி, களபூமி காரைநகரைச் சேர்ந்த துரைச்சாமி மகாலிங்கம் என்பவருடைய தே. அ. அட்டை (இல. 630683246V) யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவும். ஸ்ரார் பிறிண்டேர்ஸ், இல. 70, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (பெருமாள் கோயிலுக்கு அருகில்). (40321)

## வீடும் வளவும் விற்பனை

நல்லூர் இருபாலை றோட்டுக்கு மத்தியில் ஞானபாஸ்கரோதய சங்க விளையாட்டரங்க வீதியில் சகல வசதிகளுடனும் அமைந்துள்ள வீடு 3 ½ பரப்பு காணியுடன் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.No. 0714 068844, 0773 144700. (40279)

## தேவை

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். வீனஸ் பாம் - பலாலி வீதி, திருநெல்வேலி. T.P.: 0777 252478, 0712 513721 (40268)

## வாடகைக்கு

யாழ்.நகருக்குள் மேல்மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு. (கந்தோர் பாவனைக்கு மட்டும்) தொடர்பு: 021-222-3239. (40259)

## THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில By: விக்னேஸ்வரன் ஆச்சாரி. 'The Royal is The Best ' 426, (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம். பிளாக் வீதி, சங்கானை. (மாதக்கட்டணம் 150/) (40249)(21-17.15)

## தவறிவிட்டது

பலாலி மத்தி, வசாவிளான் என்ற முகவரியையுடைய சுப்பிரமணியம் செந்தூரன் என்பவருடைய தே.அ.அட்டை (863240263V) யும் வி. அ. அட்டை, (090702318) என்பன 21.09.2005 புதன்கிழமை புன்னாலைக்கட்டுவனுக்கும் சுன்னாகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் ஒப்படைத்துதவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

பாபு பேக்கரி (40328) (24)

புன்னாலைக்கட்டுவன் தெற்குச் சந்தி. T.P.: 077 6160476

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுதுபார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ். போன் ஷொப்**

10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (ஸ்ரீ ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம். (21-17-15)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 23.08.2005 செவ்வாய்க்கிழமை அன்று இங்கிலாந்தில் இயற்கையெய்திய எம் இல்லத் தலைவர் புங்குடுதீவு - 12, வேலணை -5 ஐச் சேர்ந்த

**அமரர் திருஞானம் திருலிங்கநாதன்**

B.sc (Hon-in-Agr.) Cey. C.A.S. Class - 1

[முன்னாள் இலங்கைத் திறைசேரிப் பணிப்பாளர்]

அவர்களின் வீட்டுக்கிரியைகள் இன்று (23.09.2005) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்த கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் தவறாது கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி,மகன், மருமகள், சகோதரி.

'கலைவாசா'
3, செங்ஆன்ஸ் 2ஆம் ஒழுங்கை,
நச்சேரியடி, யாழ்ப்பாணம். (40328)(21.17.15)

## அறிவுப்போட்டி பிற்போடப்பட்டது

வலி.தெற்கு,செப்.23

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான கோட்டமட்ட மனைப் பொருளியல் அறிவுப் போட்டி ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி காலை 9 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறும். இப் போட்டி நாளை 24ஆம் திகதி நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஓ-152)

## ஐந்தாவது பிறந்ததின வாழ்த்து

நோர்வேயில் வசிக்கும் **நிக்சன் - பெல்சியா தம்பதிகளின்** செல்வப் புதல்வன் **நொறிஸ்** தனது ஐந்தாவது பிறந்தநாளை இன்று (23-09-2005) வெள்ளிக்கிழமை நோர்வேயில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, தம்பி (பெல்சன்), அப்பப்பா (தங்கறாஜா), அப்பம்மா (ஆசைக்கிளி), பிரான்சில் வசிக்கும் தொட்டப்பா (கொயன்ஸ்), தொட்டம்மா (வதனா), மச்சான் (ஏனோஸ்), மச்சாள் (எஸ்தர்), யாழ்ப்பாணத்தில் வசிக்கும் மாமிமார், மாமாமார், சித்தப்பாமார், லண்டனில் வசிக்கும் மாமா (மதன்), நோர்வேயில் வசிக்கும் சித்தப்பா (யூடி), யாழ்ப்பாணத்தில் வசிக்கும் பேரன்மார், பேத்திமார் மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
சவிரியான் தங்கறாஜா
(அப்பப்பா).

99, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021-222-3693.
(40323)(50-11-17)




## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் எமது சைவ உணவகத்திற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை. நற்பண்பும் கடமை உணர்வும் உள்ளோர் விண்ணப்பிக்கவும்.

1. பாதுகாப்பு உத்தியோகத்தர்
2. மேற்பார்வையாளர்
3. சப்பிளையேர்ஸ் [உணவு பரிமாறுவோர்]
4. குசினி உதவியாள்கள்
5. அரையல் பகுதியினர்
6. மற்றும் பல உதவி வேலைகளுக்கும்

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி
விளம்பர இலக்கம். 2703,மே/பா உதயன் பணிமனை,
யாழ்ப்பாணம்.

(40246) (21.34.15)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

## பொதுப்பட்டமளிப்பு விழா - 2005

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொதுப்பட்டமளிப்பு விழா எதிர்வரும் 2005.10.06 - 2005 .10.07 ஆம் திகதிகளில் பத்து அமர்வுகளில் நடைபெறும்**

இப்பட்டமளிப்பு விழாவில் நேரடியாகப் பட்டம் பெறுவோருக்கு கீழ்க்குறிப்பிடப்பட்ட திகதிகளில் பட்டமளிப்பு அங்கிகள் வழங்கப்படும். பட்டமளிப்பு விழாவில் பங்குபற்றுவதற்காக பணம் செலுத்திய பற்றுச்சீட்டினையும், பல்கலைக்கழக அடையாள அட்டையினையும் காண்பித்து பின்வரும் திகதிகளில் அங்கிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

| திகதி | நேரம் | பட்டம் |
| --- | --- | --- |
| 2005.09.24 | காலை 9.30 - 12.00<br>பிற்பகல் 2.00 - 4.30 | வணிகமாணி |
| 2005.09.25 | காலை 9.30 - 12.00 | தொழில் நிர்வாக மாணி |
| | பிற்பகல் 2.00 - 4.30 | விவசாய விஞ்ஞான மாணி |
| 2005.09.26 | காலை 9.30 - 12.00<br>பிற்பகல் 2.00 - 4.30 | விஞ்ஞானமாணி |
| 2005.09.27 | காலை 9.30 - 12.00<br>பிற்பகல் 2.00 - 4.30 | கலைமாணி |
| 2005.09.28 | காலை 9.30 - 12.00<br>பிற்பகல் 2.00 - 4.30 | கலைமாணி |
| 2005.09.29 | காலை 9.30 - 12.00<br>பிற்பகல் 2.00 - 4.30 | கலைமாணி |
| 2005.10.01 | காலை 9.30 - 12.00 | மருத்துவமாணி<br>சத்திரசிகிச்சைமாணி |
| | பிற்பகல் 2.00 - 4.30 | சித்த வைத்திய<br>சத்திர சிகிச்சைமாணி |
| 2005.10.02 | காலை 9.30 - 12.00 | நுண்கலைமாணி<br>(இராமநாதன் நுண்கலைக் கழகம்) |
| | பிற்பகல் 2.00 - 4.30 | வவுனியா வளாகம்<br>(அனைத்துப் பீடங்களும்) |
| 2005.10.03 | காலை 9.30 - 12.00<br>பிற்பகல் 2.00 - 4.30 | உயர் பட்டப்படிப்புகள் பீடம் |

பட்டமளிப்பு விழாவில் புகைப்படம் எடுப்பதற்கான கட்டணமாக ரூபா 29.00 (போட்டோ ஒன்றிற்கு) செலுத்தப்படல் வேண்டும்.

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,*
21/09/2005

**பதிவாளர்.**

(சி-45240)(21.17.15)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யார்க்கரு, கரவெட்டி கிழக்கை பிறப்பிடமாகக் கொண்ட

**திரு.ஜெகதீசன் பிரதீபன்**

பேராதனையில் தனது பொறியியலாளர் கல்வியை சிறப்புற முடித்து, ஆஸ்திரேலியாவிற்கு புலமைப் பரிசில் கிடைத்து மேற்படிப்பிற்காகச் சென்றுள்ளார். இவர் மேலும் பல பட்டங்கள் எடுத்து வாழ்வினில் சிறப்புற வாழ வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
**பொறியியல் பீட நண்பர்கள்.**

(40322)
(46-17-15)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுப்பையா அமிர்தலெட்சுமி



வேலணையைப் பிறப்பிடமாகவும் நயினாதீவு, 4ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பையா அமிர்தலெட்சுமி அவர்கள் (21.09.2005) அன்று நயினாதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு சுப்பையா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முருகேசு - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான சுப்பையா - அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் மகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான தங்கேஸ்வரன் விக்னேஸ்வரன் மற்றும் புஸ்பராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை, பார்வதிப்பிள்ளை, வள்ளியம்மை, யோகம்மா ஆகியோரின் மைத்துனியும் மல்லிகாதேவி, சறோஜினிதேவி (சுவிஸ்), கணேசலிங்கம், அமிர்தலிங்கம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தியாக ராசா, புஸ்பராசா (சுவிஸ்), நவநிதி வடிவழகு (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும் சதீசன் (இத்தாலி), துஷ்யந்தன், தனுஷா, ஜீவகாந்தன் (கனடா), நளினி, புவிசங்கர், சிந்துஷா (சுவிஸ்), சாயினி, விந்துஜா, திலக்ஷனா, பிரணவன், சர்விகா (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 25.09.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் நயினாதீவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
(40325) (24-21-15-17)

தகவல்:
S.கணேசலிங்கம்
(மகன் - பெரியதம்பி)

## ஆர்தர் றெஜினோல்ட் ஹென்றியோசப் (றெஜி)

சில்லாலை தெற்கைச் சேர்ந்த ஆர்தர் றெஜினோல்ட் ஹென்றியோசப் அவர்கள் 17.09.2005 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் யக்கோமுத்து ஹென்றியோசப் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்) - ஹகிதாயா தம்பதியரின் ஏக புத்திரனும் சூட்டி, துஷாரா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற யக்கோமுத்து - ஞானம்மா தம்பதியரின் அன்புப் பேரனும் ரவி, ராகவன் ஆகியோரின் மைத்துனரும் சென் யோண்சி புவிராசசிங்கம், எட்வேட் இராசநாயகம், பீற்றர்கனி யூட் (சுவிஸ்), போர்ஜியா அருளானந்தம் (சுவிஸ்), காலஞ்சென்றவரான பற்றிக் இம்மானுவேல் மற்றும் ஜோண் பொஸ்கோ (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பெறாமகனும் திருமதி டெய்சி ஜீவரத்தினம் அவர்களது மருமகனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் லண்டனில் இன்று 23.09.2005இல் நடைபெறும்போது சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தில் பிற்பகல் 5 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியில் பங்கு கொண்டு அவரது ஆத்மா சாந்திக்காக இறைவனை மன்றாடும் படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டி நிற்கின்றோம்.

அம்மன் வீதி,
சில்லாலை தெற்கு,
பண்டத்தரிப்பு.
(40320) (24-15-17))

தகவல்:
சென் யோண் புவிராசசிங்கம்,
எட்வேட் இராசநாயகம்
(சிறிய தகப்பன்மார்),
டெய்சி ஜீவரத்தினம் (மாமி).

# பாதுகாப்புப் படையினரின் கையாலாகாத்தனத்தை மூடிமறைப்பதற்காகவே அவசரகாலச் சட்டம் அமுல்!

## அரசைக் கடுமையாகச் சாடுகின்றார் இரா.சம்பந்தன்

பாதுகாப்புப் பிரிவினரதும் புலனாய்வுத் துறையினரதும் கையாலாகாத்தனத்தாலேயே முன்னாள் அமைச்சர் கதிர்காமர் கொலைசெய்யப்பட்டார்.

கொலைச் சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்து கைதுசெய்வதை விட்டு, அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதால் எந்தவிதமான நன்மையும் ஏற்படப்போவதில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் இரா.சம்பந்தன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் சாடினார்.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய சம்பந்தன் எம்.பி. மேலும் கூறியதாவது:-

அமைச்சர் கதிர்காமரின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்களைக் கைதுசெய்வதற்காகவே அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதாக முன்பு கூறினார்கள்.

அப்படியானால் இதுவரை எத்தனை பேரைக் கைதுசெய்துள்ளீர்கள்? கொலையாளிகளைக் கண்டுபிடித்துவிட்டீர்களா? எதுவுமே நடைபெறவில்லை. புலனாய்வுத் துறை செயலிழந்துவிட்டது.

அவசரகாலச்சட்டத்தை நீடித்த பின்னரும் இந்தச் செயல் இடம்பெற்றவண்ணமே இருக்கின்றது. அதனைத் தடுக்கமுடியவில்லை.

இந்தச் செயல்களைத் தடுப்பதற்காகவே என்று கூறிக்கொண்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்டம் முற்றும் தமிழர்களுக்கு எதிராகவே பிரயோகிக்கப்படுகின்ற அடக்கு முறைவடிவமாக உள்ளது.

தமிழர்களின் தன்மானத்திற்கும் சுய கௌரவத்திற்கும் தமிழ்த் தேசிய உணர்விற்கும் விடுக்கப்பட்ட ஒரு சவாலாகவே அமைந்துள்ளது அவசரகாலச் சட்டம்.

ஏற்கனவே, அவசரகாலச் சட்டத்தின் காரணமாகப் பல்வேறு விதமான கொடுமைகளுக்கும் சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கப்பட்டவர்கள் தமிழர்களே. மீண்டும் இப்படிக்




கசப்பான நிலைக்கு எம்மை இட்டுச்செல்லவே முனைகின்றீர்கள்.

நடைமுறையிலுள்ள யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைப் படிப்படியாக இல்லாதொழிக்கவே மறைமுகமான செயலில் ஈடுபட்டுள்ளீர்கள்.

அண்மைக்காலங்களில் கணக்கிடமுடியாத அளவில் சோதனைச் சாவடிகளும் தடைமுகாம்களும் அமைக்கப்பட்டுள்ளன.

சோதனை என்ற பெயரில் தமிழ்மக்கள் அநாகரிகமானமுறையில் விசாரிக்கப்படுகின்றனர். அருவருக்கத்தக்கவகையில் படையினர் ஈடுபடுகின்றனர்.

அதிகாரிகள் அவசரகாலச் சட்டத்தைத் தமது கைகளில் வைத்துக்கொண்டு காட்டுத் தர்பார் நடத்துகின்றனர்.

தமிழ்ப் பெண்கள் அவமானப்படுத்தப்படுகின்றனர். அவசரகாலச் சட்டத்தின்மூலம் தமிழ்விரோத சக்திகளின் கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

அதற்குக் காரணமான படையினருக்கு எதிராக எந்தவிதமான விசாரணைகளும் நடத்தப்படவில்லை. நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. கீழ்மட்ட அதிகாரிகள் தன்னிச்சையாகச் செயற்படுகின்றனர். இதனைத் தட்டிக்கேட்க எவரும் இல்லை.



நாடு சுதந்திரமடைந்த ஐம்பது வருட காலத்தில் கூடுதலான பகுதி அவசரகாலச் சட்டத்தின் துணையுடனேயே ஆளப்பட்டு வந்துள்ளது.

இந்தக் காலகட்டத்தில் அவசரகாலச் சட்டத்தின் கொடுமைகளை அனுபவித்தவர்கள் தமிழர்களேயன்றி வேறு எவருமில்லை.

தொடர்ந்தும் இந்தநிலைக்குத் தள்ளப்படக்கூடாது. தமிழர்களின் தன்மானத்துக்கும், சுயகௌரவத்துக்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ள அவசரகாலச் சட்டத்தை நாம் வன்மையாக எதிர்க்கின்றோம். இந்நிலை தொடர்ந்தால் சகவாழ்வு சிதறடிக்கப்படும். சமாதானம் குழிதோண்டிப் புதைக்கப்படும் என்பது உறுதி. எனவே, அரசு இதனை ஒரு முடிவுக்குக் கொண்டுவர உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார் சம்பந்தன் எம்.பி. (க)

# ஐ.தே.கட்சியினரின் சுயரூபம் வெளிப்பட்டுவிட்டது

## சபையில் சிவநாதன் கிஷோர் சாட்டை

பெரும்பான்மைச் சிங்களவர்களின் ஆதரவைப் பெறவும் சிங்களவர் மத்தியில் தமது பெயரைக் காப்பாற்றிக்கொள்ளவும் அவசரகாலச் சட்டத்தை ஆதரித்தது ஐக்கிய தேசியக் கட்சி. அதன்மூலம் அக்கட்சியினர் தமது இனவாதத்தை வெளிப்படுத்தி விட்டனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சிவநாதன் கிஷோர் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் குற்றஞ்சுமத்தினார்.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான விவாதத்தில் உரையாற்றிய கிஷோர் மேலும் கூறியதாவது:-

கடந்தமுறை அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட்டபோது ''ஒருமாதகாலத்திற்கு அதை நீடிப்பதை மட்டுமே ஆதரிக்கின்றோம், கொலையாளிகள் கண்டுபிடிக்கப்படவேண்டும்'' என ஐ.தே.கவினர் கூறினர்.

ஆனால், இம்முறையும் ஆதரவு வழங்கியது ஏன்?

ஜனாதிபதித் தேர்தல் வருவதால் பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெறவும் அவர்களின் எதிர்ப்பில் இருந்து தப்பிக்கொள்ளவும் அவசரகாலச் சட்டத்தை ஆதரித்து வாக்களித்தனர் ஐ.தே.கவினர்.

அதேவேளை -

தமிழர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக ஐ.தே.கட்சி மற்றும் ஸ்ரீ ல.சு.கட்சி வேட்பாளர்கள் பொய்யான வாக்குறுதிகளை வாரி வழங்கி வருகின்றனர்.

இவற்றை எல்லாம் நம்பத் தமிழர்கள் தயாராக இல்லை. யார் வெற்றிபெற்றாலும் எங்களுக்குக் கவலை இல்லை. எங்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் தனித் தமிழீழம் உருவாவதை எவராலும் தடுக்க முடியாது - என்று கிஷோர் கூறினார். (க)

---

# சுண்டுக்குழி ச.ச.நிலைய ஆண்டுவிழா விளையாட்டுப் போட்டிகளின் முடிவு

யாழ்ப்பாணம்,செப்.23

சுண்டுக்குழி சன சமூக நிலையத்தின் 77ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

**சைக்கிளோட்டம்**

**ஆண்கள்:**-ஞானசேகரன் (கிறன் கிங்ஸ் வி.க), ரதீஸ்கரன் (சுண்டுக்குழி ச.ச.நிலையம்), செல்வா (சுண்டுக்குழி ச.ச.நிலையம்),

**பெண்கள்:**- வை.உஷாலினி (சுண்டுக்குழி ச.ச.நிலையம்), வை.சாளினி (சுண்டுக்குழி ச.ச.நிலையம்) எஸ்.விேனோஷா (சுண்டுக் குழி ச.ச.நிலையம்).

**மரதன் ஓட்டம்**

**ஆண்கள்:**-ஜெயதாஸ் (பாரதி வி.க), கவிராஜ் (கிறீன் கிங்ஸ் வி.க.), ரதீஸ்ரதன் (பாரதி வி.க.). (ஒ-190)

## மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

யாழ்ப்பாணம்,செப்.23

புத்தூர் கிழக்கு மத்திய சனசமூக நிலையத்தினர் நடத்தும் மாட்டுவண்டிச் சாவரிப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணிக்கு நீர்வேலி சவாரித்திடலில் நடைபெறவுள்ளது. (ஒ-202)

## கரப்பந்தாட்டம்

வலி.வடக்கு,செப்.23

உடுவில் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பாந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

வெண்புறா விளையாட்டுக் கழகம் எதிர் கே.கே.எஸ். ஐக்கிய விளையாட்டுக்கழகம்.

பிரதீப் விளையாட்டுக்கழகம் எதிர் அரியாலை விளையாட்டுக் கழகம். (ஒ-86)

* * *

வலி.வடக்கு,செப்.23

இளவாலை கிராம அபிவிருத்திச்சங்க அனுசரணையுடன் வெண்புறா விளையாட்டுக் கழகம் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வெண்புறா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகமும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன. (ஒ-86)

# கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அரியாலை ச.ச.நிலையம் வெற்றி

யாழ்ப்பாணம்,செப்.23

அரியாலை சனசமூக நிலையத்தின் 56ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட மாவட்ட ரீதியிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் அரியாலை சனசமூக நிலைய அணி வெற்றிபெற்றது.

அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் கடந்த சனிக்கிழமை மட்டுப்படுத்தப்பட்ட 12ஓவர்கள் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் அரியாலை சனசமூக நிலைய அணியை எதிர்த்து சிக்ஸ் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை சனசமூக நிலைய அணியினர் 11.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 83 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் அருண், நிரோஜ் ஆகியோர் முறையே 21, 16 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தனர்.

அஜித் 6 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிக்ஸ் ஸ்ரார் அணியினர் 70 ஓட்டங்களைப் பெற்றனர்.

அஜித், ரஜி ஆகியோர் தலா 13 ஓட்டங்களைப் பெற்றனர். ஜெயசந்திரன் 5ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும், காண்டீபன் 11 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இறுதியாட்டத்தில் நடுவர்களாக ச.குண தாஸ், ஜேக்ஸ் ஆகியோர் கடமையாற்றினர். (ஒ-190

# டில்லியில் சுட்டுக் கொல்லச் சதி: பிளின்டொப் அதிர்ச்சித் தகவல்



இந்தியாவின் புதுடில்லியில் இடம்பெற்ற ஆட்டத்தில் களத் தடுப்புச் செய்துகொண்டிருந்தேன். அப்போது ஏதோ ஒன்று என் மீது பயங்கரமாகத் தாக்கியது. உடனே குனிந்து பார்த்தேன். மைதானத்தில் ஆங்காங்கே துப்பாக்கிக் குண்டுகள் சிதறிக்கிடந்தன. அப்படியே அதிர்ந்து போனேன்'' என பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளார் இங்கிலாந்து அணியின் ஆன்ட்ரூ பிளின் டொப்.

கடந்த 2002ஆம் ஆண்டில் இங்கிலாந்து அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டது. 6 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்றது. இங்கிலாந்து 1-3 என்ற கணக்கில் பின்தங்கியிருந்தது.

இந்தச் சூழலில் அதிரடி வீரராகக் கலக்கிய பிளின்டொப் தொடர் சமநிலையில்(3-3) முடிய முக்கிய காரணமாக இருந்தார். சர்ச்சைக்குரிய டில்லி ஐந்தாவது ஒரு நாள் போட்டியில் 3 சிக்சர், 1 பவுண்டரியுடன் 39 பந்தில் 52 ஓட்டங்கள் பெற்று வெற்றி தேடித்தந்தார்.

இப்படிப் பல்வேறு விதத்திலும் முக்கியத்துவம் வாய்ந்த இந்தியத் தொடர் குறித்து தனது 'சுயசரிதையில் பிளின்டொப் குறிப்பிட்டுள்ளார்.

இதில் டில்லி ஒரு நாள் போட்டியில் யாரோ ஒருவர் தன்னைக் குறிவைத்து துப்பாக்கியால் சுட்டதாகத் தெரிவித்துள்ளார். இந்த விஷயத்தை வெளியில் தெரிவிக்க அணி நிர்வாகம் தடுத்து விட்டதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,செப்.23

நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகம் 14ஆம் ஆண்டு நிறைவையொட்டி கழக மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

பிற்பகல் 3.30 மணி ஆதிசக்தி வி.க. எதிர் விக்னேஸ்வரா வி.க.,

மாலை 4.30 மணி யங்கம்பன்ஸ் வி.க. எதிர் புனித தோமஸ் இ.வி.க. (ஒ-190)

## நல்லூர் அணி கண்டி புறப்படு

யாழ்ப்பாணம்,செப்.2

கண்டி றோட்டறிக் கழக ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள ரி.ஆர்.ஆர் ராஜன் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நல்லூர் றோட்டறக்ட் கழக கிரிக்கெட் அணி பங்குபற்ற உள்ளது.

இப்போட்டி எதிர்வரும் 28ஆம் திகதி புதன் கிழமை கண்டியில் நடைபெறவுள்ளது. இச்சுற்றுப் போட்டியில் 6 ஓவர் ஆட்டத்தில் 6பேர் கொண்ட அணிகள் பங்கேற்கின்றன. (ஒ-190)

"வெடிபொருளால் எனது கை இரண்டையும் இழந்துவிட்டேன். பள்ளிக்கூடத்தில எல்லாரும் என்னை பகிடிபண்ணினம். நான் அழுதுகொண்டு வீட்டை போனன். அப்பா என்னை பாடசாலையால் நிற்பாட்டிப்போட்டார்." — காந்தன் வயது 12

**உங்களுக்குத் தெரியுமா?**

ஊனமுற்ற பிள்ளைகள் சமுதாயத்தில் முழுமையாகப் பங்கேற்று நல்ல வாழ்க்கை வாழ விசேடபராமரிப்பு, கல்வி, பயிற்சி ஆகியவை பெற உரிமையுடையவர்கள்-

சிறுவர் உரிமைகள் சமவாயம் - 23

பெற்றோர்களே!
உங்கள் பிள்ளை ஊனம் என்று எண்ணி ஒதுக்குவதைவிட்டு அவர்களும் சமுதாயத்தில் முன்னிற்க உதவுவீர்களா?

உலக சிறுவர் தினத்திற்கு இன்னும் 8 நாட்களே உள்ளன.

பரி.தோமாவின் கல்லூரி, கல்கிசை
தமிழ் இலக்கிய மன்றம் நடத்தும்

## அகில இலங்கை தமிழ்த்திறன் காண் மற்றும் விவாதப் போட்டிகள் -2005

பரி.தோமாவின் கல்லூரி கல்கிசை தமிழ் இலக்கிய மன்றம் இவ்வருடம் தனது வைரவிழாக் கொண்டாட்டங்களையொட்டி நாடு முழுவதும் பரந்திருக்கும் தமிழ் மாணவரை ஒருமிக்கச் செய்து தத்தம் தனித்தமிழ்த் திறன்களை வெளிக்கொணரும் முகமாக அகில இலங்கை ரீதியில் தமிழ்த்திறன் காண் மற்றும் விவாதப்போட்டிகள் 2005 ஐ செந்தமிழ் அன்னையின் நாள் தொட்டு நடத்தவுள்ளது.

போட்டி விவரங்கள்:

* கட்டுரை
* சிறுகதை
* கவிதை
* பேச்சு
* தனியிசை
* ஆங்கிலக் கட்டுரை

மேற்படி போட்டிகள் கீழ்ப்பிரிவு (தரம் - 6,7,8), மத்திய பிரிவு (தரம்- 9,10), மேற்பிரிவு (தரம் -12,13) ஆகிய 3 பிரிவுகளில் நடைபெறும்.

மேலும் அகில இலங்கைத் தமிழறிவுப் போட்டியும் விவாதப் போட்டிகளும் திறந்த போட்டிகளாக நடைபெறும்.

மேற்படி போட்டிகள் 01.10.2005 அன்று காலை 8.30 மணிக்கு பரி.தோமாவின் கல்லூரி மண்டபத்தில் வெகுசிறப்பாக அரங்கேறும் என அனைத்து பாடசாலைகளுக்கும் தெரியத் தருகின்றோம். போட்டிகளில் பங்குபற்றுபவர்கள் 31.01.1986 இற்குப் பின்னர் பிறந்தவர்களாக இருக்கவேண்டும். 28.09.2005 இற்கு முன்னர் தம் வரவை உறுதிப்படுத்தும் வெளிமாவட்டப் பாடசாலைகளுக்கு தங்குமிட, உணவு வசதிகள் இனிதே ஒழுங்கு செய்துதரப்படும். இந்தத் தோமிய முயற்சியை ஊக்குவிக்குமாறும் நாடெங்கிலும் தமிழ்ப்பெருமை பரவுவதற்காகவும் அனைத்து பாடசாலைகளையும் இந்த அகில இலங்கைப் போட்டிகளில் கலந்துசிறப்பிக்குமாறு பணிந்து நிற்கின்றோம்.

உங்கள் வரவை உறுதிசெய்யும் பொருட்டு,

தொடர்புகளுக்கு:

Fax: 011 4528840
(ATTN: SECRETARY,
TAMIL LITERARY ASSOCIATION,
S.THOMA'S COLLEGE, Mt.LAVINIA

திரு. K.V.Kuggatharan (பொறுப்பாசிரியர்) தொ.இல. 011 2593107
M.F.IMRAN (தலைவர்) தொ.இல. 011 2729708
V.S.AJANTHAN(பொருளாளர்) தொ.இல. 011 2363211

(ள-45218)(32-11-19)

உங்கள் வாழ்வுக்கு
பிரகாசமான எதிர்காலம்
எங்கள் காப்புறுதி நிழலில் எங்களுடன்
நீங்களும் ஒருவராய் இணைந்து
கொள்ளுங்கள்

காப்புறுதி ஆலோசகர் பதவி வெற்றிடங்கள்

முடிவில்லாத வருமானத்தோடு, சமூகத்துக்கும் சேவை செய்து; உங்கள் வியாபாரத்தையும் முன்னேற்றிக்கொள்ளக் கனவு கண்டீர்களா?

தகைமைகள் :-
* க.பொ.த (சாதாரணம்) இல் தமிழ்/சிங்களம், ஆங்கில பாடத்துடன் கணித பாடம் அடங்கலாக ஆறு பாடத்தில் சித்தி.
* (உண்மைபேசி) தனக்கேயுள்ள விசேட திறமையால் நிறுவனத்தின் வியாபார நடவடிக்கையை அபிவிருத்தி செய்தல்

பயிற்சிகள்
* தொழில்சார் பயிற்சிகளும், கையேடுகளும் வழங்கப்படுவதுடன், எமது நிறுவனத்தினால் நடத்தப்படும் பயிற்சிப் பட்டறைகளுக்கூடாக மேலதிக பயிற்சிகளும், ஆலோசனைகளும் வழங்கப்படும்.
* 2002 இல.43 காப்புறுதித்துறையை அபிவிருத்தி செய்யும் சட்டத்துக்கு அமைய நடத்தப்படும் பரீட்சைகள் எடுப்பதற்கான ஆலோசனைகளும் பயிற்சிகளும் வழங்கப்படும்.

கடமைகள்
* எமது யாழ்.பிராந்திய அபிவிருத்தி நிலையத்தின் கீழ் காப்புறுதி தேவைப்படுவோருக்கு அவர்களுடைய நிதித் தேவைகளுக்கு ஏற்ப ஒவ்வொரு தனிநபருக்கும் சிறந்த ஆயுள் காப்புறுதியை வழங்கல்.
* மக்களின் சொத்துக்களுக்கான காப்புறுதியை வழங்கல் (வீடுகள், கடைகள், தொழிற்சாலைகள், வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் கூட்டுக் காப்புறுதி)
* சிறந்த நம்பிக்கைக்குரிய சேவையை மக்களுக்கு வழங்கி நிறுவனத்துக்கும் மக்களுக்கும் இடையில் நல்லுறவை ஏற்படுத்தல்.

நன்மைகள்
* நீங்கள் சேகரிக்கும் கட்டுப்பணத்தில் தரகு அடிப்படையில் உங்கள் வருமானம் அமையும்.
* ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள்.
* உங்களுக்கான சுயதொழில் ஒன்றை வளர்த்தல்.
* சரியான காப்புறுதிச் சேவையை வழங்கி சமூகத்துக்கு சேவை செய்யும் அந்தஸ்து.
* உங்கள் திறமைக்கு ஏற்ப நீங்கள் வியாபார அபிவிருத்தி அலுவலராக வாய்ப்பு.

உங்கள் விண்ணப்பங்களை, பூரண சுயவிவரக் கோவையுடன் இணைத்து 7 நாள்களுக்குள் கீழ்க்காணும் விலாசத்துக்கு பதிவுத் தபாலில் அனுப்பவும். (விண்ணப்பிக்கும்போது கடித இடப்பக்க மேல் உறையில் பதவி தொடர்பான விவரத்தைக் குறிப்பிடவும்.)

Manager,
HNB Assurance,
C/O Hatton National Bank,
212-214, Hospital Road, Jaffna.
Tel No. 021-222 6016

HNB
ASSURANCE

## சுகாதார அமைச்சின் சுவரொட்டிப் போட்டி

காரைதீவு,செப்.23

சுகாதார அமைச்சின் தேசிய எய்ட்ஸ் தடுப்பு நிகழ்ச்சித் திட்டப்பிரிவு பாடசாலைகளுக்கிடையே தேசிய மட்டத்தில் எய்ட்ஸ் தடுப்பு சுவரொட்டிப் போட்டியை நடத்தவுள்ளது.

இந்தப் போட்டி இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது.

தரம் 9-11 வரையான மாணவர்கள் முதலாவது பிரிவிலும், தரம் 12-13 வரையான மாணவர்கள் இரண்டாவது பிரிவிலும் பங்கேற்க முடியும்.

இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் 50 செ.மீ x 42 செ.மீ அளவுடைய காகிதத்தில் சுவரொட்டியைத் தயாரித்து பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

தெரிவு செய்யப்படும் சுவரொட்டிகள் கொழும்பு மகாவலி நிலையத்தில் கண்காட்சிக்கு வைக்கப்படும்.

வெற்றிபெறும் மாணவர்களுக்கு பணப்பரிசிலும் சான்றிதழும் வழங்கப்படும்.

முதற்பரிசு ரூபா 10 ஆயிரமும் இரண்டாவது பரிசாக 7 ஆயிரத்து 500 ரூபாவும் மூன்றாம் பரிசாக 5 ஆயிரம் ரூபாவும் ஏனைய 10 பேருக்கு ஆயிரம் ரூபா வீதமும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-73-203)

டிஜிற்றல் போட்டோ கொப்பி
$A_4$ - கறுப்பு வெள்ளை -3 ரூபா
$A_4$ - கலர் 40 ரூபா

மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்,
62/16, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(அ/45195) (39-1119-32)

பதவி வெற்றிடங்கள்

1. தரம் 6 - 11 வரையான சகல பாடங்களுக்குமான ஆசிரியர்கள்
2. தரம் 3 - 5 வரையான ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள்
3. அலுவலக ஊழியர்கள்

மேற்படி பதவிகளுக்கு பொருத்தமானவர்கள் தங்கள் கல்வி, தொழில் தகைமைகளை நிரூபிக்கும் சான்றிதழ்களுடன் 25.09.2005 ஞாயிறு காலை 9 -12 வரை நேரில் சமூகம் கொடுக்கவும்.

The Express Institute
Irupalai, Kopay.
- அதிபர்

## ஓராண்டு நினைவஞ்சலி



| மலர்விரிந்தது | மலர்மறைந்தது |
|---|---|
| 15 - 04 - 1946 | 04 - 10 - 2004 |

### திருமதி நடேசு கனகேஸ்வரி

திதி: 28-09-2005

ஆண்டு ஒன்று ஆனதம்மா
எமைப்பிரிந்து நீங்கள்
ஆறாத்துயர் வாட்டுதம்மா எமைநித்தம்
வாழும் வரை உமைநினைந்து உருகி
வாழும் நாம் உமது ஆன்மா ஈடேற்றம்பெற
எந்நாளும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அம்மன் அருள்,
வட்டு வீதி,
வட்டுக்கோட்டை.

உம்பிரிவால் துயருற்று வாடி நிற்கும்:
கணவர், மகன்மார், மகள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

(40252)(26-32-11-19)

## நீங்காத நினைவலையில் ஓராண்டு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03 - 07 - 1933 | 04 - 10 - 2004 |

### அமரர் சின்னத்தம்பி இராசு

(சமாதான நீதிவான்)

எங்கள் குடுத்பத்தின் குலவிளக்கே!
அன்பின் இருப்பிடமாய் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய், சமூகத்தின் வழிகாட்டியாய்
எல்லோரும் போற்றும் பண்பாளனாய்
பாரினில் வாழ்ந்து வழிகாட்டிய தெய்வமே!
தாங்கள் இறையடி சேர்ந்து ஓராண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்மைவிட்டகலாது.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (23-09-2005) வெள்ளிக்கிழமை நண்பகல் எமது இல்லத்தில் நடை பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

24, பழம் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம் (40296)(26-32-11-19)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

UNIVERSITY OF MADRAS
INSTITUTE OF DISTANCE EDUCATION
சென்னை பல்கலைக்கழகம்

தேசிய தரமதிப்பீட்டு குழுவால் ஐந்து நட்சத்திர தகுதியும், பல்கலைக்கழக நல்கை ஆணையத்தால் 'உயர்திறன் மையம் என்ற தகுதியும் பெற்றது'

சென்னைப் பல்கலைக்கழகத்தின் தொலைதூரப் பட்டப்படிப்புகள்
2005 - 2006 கல்வி ஆண்டிற்கான அனுமதி சேர்க்கை அறிவிப்பு

UNDERGRADUATE
3 Year Degree Programme

| | |
|---|---|
| B.Com | Bachelor of Commerce |
| B.B.A. | Bachelor of Business Administration |
| B.C.A. | Bachelor of Computer Application |
| B.Sc. | Psychology |
| B.A. | Tamil |
| B.A. | English |

POSTGRADUATE
2 Year Degree Programme

| | |
|---|---|
| M.Com | Master of Commerce |
| M.Sc. | Psychology |
| M.A. | Tamil |
| M.A. | English |
| M.A | Christian Studies |
| M.A | Economics |

Regular University Stream
முறைசார் பல்கலைக்கழக அமைப்பு
A/L 3 பாடங்களில் தேர்ச்சி
(Maths,Bio-Science,. Commerce, Arts)

Open University Stream
திறந்த நிலை பல்கலைக்கழக அமைப்பு
18 வயது பூர்த்தியடைந்தவர்களும் 3 ஆண்டு பட்டப்படிப்புக்கு விண்ணப்பிக்கலாம்.

தகவல் மற்றும் நேரடி அனுமதி சேர்க்கை மையம்
ASIAN COMPUTER SYSTEMS
2G, Stanley Road, Jaffna. Tel : 021 222 5677

# பாலியல் துஷ்பிரயோக வழக்கு சிப்பாய்க்கு 2 வருட சிறைத்தண்டனை!

யாழ்ப்பாணம்,செப்.23

வயோதிப மாது ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயன்ற வழக்கில் சிப்பாய் ஒருவருக்கு ஐந்து வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருடச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் நீர்வேலிப் பகுதியில் வயோதிப மாது ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயன்றதாகத் தெரிவித்து பௌமுத்தலாகே விமலரட்ண என்ற சிப்பாய் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு விசாரணை நேற்று யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் நடைபெற்றது. அச்சமயம், குறிப்பிட்ட சிப்பாய்க்கு 5 வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட சிறைத்தண்டனையை விதித்த நீதிவான், சிப்பாயின் கைவிரல் அடையாளத்தைப் பதிவு செய்யுமாறு உத்தரவிட்டார். (எ)



இசை நடனப் டிப்ளோமா பட்டதாரிகள் தமக்கு நியமனம் வழங்கக் கோரி யாழ். வலயக் கல்வி அலுவலகம் முன் நேற்று முதல் தொடர் மறியல் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு அவர்கள் மறியலில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம். (படம்: பிரபா)

# கிராமிய தற்காப்புப் பயிற்சி: புளியங்குளத்தில் ஆரம்பம்

புளியங்குளம்,செப்.23

புளியங்குளம் பிரதேசத்தில் கிராமிய தற்காப்பு பயிற்சி நேற்று ஆரம்பமானது.

பிற்பகல் 3.30 மணியளவில் புளியங்குளம் புரட்சி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த தற்காப்புப் பயிற்சியில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

முன்னதாக வவுனியா வடக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் ஆ.திலீப் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் இரண்டு மாவீரர்களின் தாயாரான செசலியா பொதுச் சுடரை ஏற்றினார்.

தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் ஏற்றிவைத்தார்.

ஈகச் சுடரை மருத்துவப் பிரிவைச் சேர்ந்த மருதினி ஏற்றினார். பொருண்மியப் பொறுப்பாளர் கரிகாலன், வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானம் ஆகியோரின் சிறப் புரைகளும் இடம்பெற்றன. (த-355)


கட்டடக் கலைஞர்
பொறியியலாளர்

கட்டட நிர்மாண வேலைகள் ஒப்பந்த அடிப்படையில் செய்து தரப்படும். அத்துடன், யாழ்./ வவுனியா வீட்டு வரைபடம். மதிப்பீடு, அலோசனைகள் வழங்கப் படும்.

(சி-45257)(30)

தொடர்புகளுக்கு: 077 651 5517

திருத்துதல்

மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், சகலவித கமராக்களும், எலொக்ரோனிக் பிளாஸ்கன், ஜெனரேட்ரர், வாட்டப்பம் போன்றவற்றின் பிளாஸ்ரிக் உடைவுகள் ஒட்டுதலும், திருத்துதலும் செய்யப்படும்.

தொடர்புகளுக்கு:-
இல.301, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கன்னாதிட்டி சந்தி சமீபமாக மேல்மாடி)

(40339)(30)

[illegible] யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
நியூபுகழ் எஸ்.ஜே.சூர்யா, நிலா நடித்த
அன்பே ஆருயிரே
காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்.

மணிகண்டன், சிம்ரன், ஜெய் ஆகாஷ் மற்றும் பலர் நடித்த
கிச்சா வயது 16
கா.நே.: 10.30,2.30,6.30,9.30. (பு.நே.)

மனோகரா யாழ்ப்பாணம்

சிம்பு, கோபிகா நடித்த
தொட்டி ஜெயா
காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30.

(சி-44110)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

ரவிகிருஷ்ணா, கோபிகா, ரேவதி நடித்த
பொன்னியின் செல்வன்
காட்சிகள்:
11.00, 3.00, 7.00 (பு.நே.).


## மரண அறிவித்தல்

### திருமதி செல்லையா இலட்சுமி

தாவடியைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா இலட்சுமி அவர்கள் நேற்று (22.09.2005) வியாழக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், செல்லம்மா, கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் மனோன்மணி, தங்கராணி, கமலா, யோகராணி (வலி. வடக்குப் பிரதேச சபை, மல்லாகம்), புஸ்பராணி (யா/ அளவெட்டி தெற்கு அ.மி.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பூவிலிங்கம் மற்றும் பாலரத்தினசிங்கம் (அரசினர் வைத்தியசாலை, சங்கானை); அழகரத்தினம் (வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை,கோண்டாவில்), ஸ்ரீஉதயமோகன் (இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்), தர்மராசா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் அளவெட்டி இந்து மயானத்திற்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அளவெட்டி தெற்கு,*
*அளவெட்டி.* (40346)(30-34-12)

**தகவல்:-**
**பிள்ளைகள், மருமக்கள்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 18.05.1959
விண்ணில் 24.08.2005

*அமரர்*
*சகாய அருள்ராஜ்*

*கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது குடும்பத் தலைவர் சகாய அருள்ராஜ் அவர்களின் நல் வாழ்வுக்காக கர்த்தருக்குள் நன்றி செலுத்தும் ஆராதனை நாளை (24.09.2005) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்த ஆராதனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*179/5, பாங்சல் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (40342)(30-34-12)

**மனைவி,**
**பிள்ளைகள்.**

### விபத்தில் காயமடைந்த வயோதிபர் மரணம்

யாழ்ப்பாணம், செப். 23

விபத்தில் படுகாயமடைந்த வயோதிபர் ஒருவர் நான்கு நாள்களின் பின்னர் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

வட்டுக்கோட்டை கிழக்கு, சித்தன்கேணியைச் சேர்ந்த எஸ்.கனகசபை (வயது-70) என்ற வயோதிபரே இவ்வாறு மரணமானவராவார்.

கடந்த17ஆம்திகதி இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் இவர் படுகாயமடைந்திருந்தார்.

இவரது சடலம் மரணவிசாரணை, பிரேதப் பரிசோதனை என்பவற்றின் பொருட்டு யாழ். ஆஸ்பத்திரியின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (எ-12)

## மரண அறிவித்தல்கள்

### கலாநிதி கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை

(முன்னாள் அதிபர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்)



காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகக் கொண்ட கலாநிதி காரை. செ.சுந்தரம்பிள்ளை அவர்கள் 21.09.2005 புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லர் - தங்கம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற அல்வாய் முருகேசு - லக்சுமி, கமலவேணி தம்பதியரின் மருமகனும், இந்திராவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நல்லதம்பி, லக்சுமி மற்றும் பரமேஸ்வரி, வள்ளியம்மை ஆகியோரின் சகோதரனும் கந்தவரோதயன், ராஜவரோதயன், இந்திரோதயன் ஆகியோரின் மைத்துனரும் கௌசல்யா, மாதவி, பூங்குன்றன், திருப்பரங்குன்றன் ஆகியோரின் தந்தையும் சத்தியலிங்கம், சிவலீலன், சங்கீதா ஆகியோரின் மாமனாரும் ஷைந்தவன், சுருதி, லஷ்மி, சேயோன், சாருகன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'ஆனந்தகானம்',*
*ஆவரங்கால்,*
*புத்தூர்.*
*T.P.: 021 4591816.*

*47, The Heights,*
*Northolt,*
*Middx UB5 4BP, U.K.*
*T.P.:0044 20 88691058*

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(40340)(30-34-12)

### திருமதி அம்பலவாணர் புஸ்பராணி



மண்டைதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல. 48, தோணிக்கல், வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அம்பலவாணர் புஸ்பராணி அவர்கள் நேற்று (22.09.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சிவசம்பு - தங்கரத்தினம் தம்பதியினரின் மூத்தமகளும் அம்பலவாணரின் அன்பு மனைவியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*48, தோணிக்கல்,*
*வவுனியா.* (40344)(30-34-12)

**தகவல்:-**
**செல்வி (மகள்).**

### திருமதி கந்தையா செல்லம்மா



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் இல. 859/17, ஆஸ்பத்திரி வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா செல்லம்மா அவர்கள் நேற்றுமுன்தினம் (21.09.2005) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா (இளைப்பாறிய புகையிரத நிலையக் கண்காணிப்பாளர்) அவர்களின் அன்பு மனைவியும் சிவசம்பு (இளைப்பாறிய புகையிரத நிலைய ஊழியர் - மன்னார்) சந்திராமாதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் மலர், ஜோர்ச், ஜோன்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று (23.09.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இல. 23, கண்டி வீதி, சுண்டுக்குளியில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக பூதவுடல் கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.23, கண்டி வீதி,*
*சுண்டிக்குளி.* (40343)(30-34-12)

**தகவல்:-**
**ஜோ.கிறேஸ் (மாதா - பிரான்ஸ்) (மகள்).**

### திருமதி கனகசபை நாகலட்சுமி

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை நாகலட்சுமி நேற்று (22.09.2005) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற பாலாவோடையைப் பிறப்பிடமாகக் கொண்ட கனகசபையின் அன்பு மனைவியும், அமரர் கேதீஸ்வரன், அமரர் சண்முகநாதன், செல்வரத்தினம், தங்கரத்தினம் ஆகியோரின் சகோதரியும் அமரர் அருமைத்துரை, அமரர் புவனேஸ்வரி, பரமேஸ்வரி, தம்பிரத்தினம், இராஜேஸ்வரி, விஜயகுமார், மகேந்திரம் ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, தம்பிமுத்து, தம்பித்துரை, சின்னக்கிளி, அன்னம்மா அவர்களின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2005) வெள்ளிக்கிழமை ந.ப. 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தாவடி இந்து மாயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(40345)(30-34-12)

**தகவல்:-**
**பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**



*உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ்.றோட்டறிக் கழகம் முற்றவெளியில் அமைந்துள்ள சுற்றுச் சூழல் பாதுகாப்பு அலுவலக வளாகத்தில் மரநடுகைத் திட்டத்தை மேற்கொண்டது. யாழ்.மாநகரசபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் மரம் ஒன்றை நாட்டுவதையும் அதில் யாழ்.றோட்டறிக் கழகத் தலைவர் றோட்டோறியன் என்.சரவணபவன், முன்னாள் தலைவர் றோட்டோரியன் கே.ஸ்ரீறிபதி, றோட்டோறியன் எஸ்.சுரேஸ், மானிப்பாய் றோட்டறிக் கழகத் தலைவர் எஸ்.ஏ.ராஜ்குமார் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.*

## கைக்குண்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கப்பட்டுள்ளனர்.

கோறளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கிண்ணையடி கிராமசேவையாளர்களான அழகரட்ணம் ஜீவரட்ணம் (வயது-51) என்பவரே இச் சம்பவத்தின்போது கொல்லப்பட்டுள்ளார். பாலசுந்தரம் ஈஸ்வரலிங்கம் (வயது-41), இராஜநாயகம் விஜயகுமார் (வயது-18) ஆகியோர் இச்சம்பவத்தில் படுகாயமடைந்துள்ளனர்.

கிராமசேவையாளர் தனது வீட்டு முற்றத்தில் உறவினர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இனந்தெரியாத நபர்கள் கைக்குண்டை வீசி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

மரணமடைந்த கிராமசேவையாளரின் சடலம் வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (எ-க)

## தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன்வைக்கவுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தை அங்கீகரிப்பதற்காகவே இந்த மத்திய குழு கூடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்கான பொதுக் கட்டமைப்பு, இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வு, போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் உட்பட பல முக்கிய விடயங்களில் ஏற்கனவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கொண்டுள்ள கொள்கைகள் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டு பிரதிபலிக்கப்படவேண்டுமென ஜனாதிபதி தமது கட்சிச் செயலாளரைப் பணித்திருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, ஜனாதிபதி நாடு திரும்பிய பின் இடம்பெறும் இந்த மத்திய குழுக் கூட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ள விடயங்களுக்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமயவுடன் செய்து கொண்டுள்ள உடன்பாடுகளுக்கும் இடையில் பெரிதும் முரண்பாடு இருப்பதால் தேர்தல் விஞ்ஞாபனத்தை இறுதி செய்வதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பெரும் சர்ச்சை ஏற்படலாமெனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-க)


BRIGHTMAN
நாவலர் வீதி,
யாழ் நகர்.
A/L கணித,
உயிரியல் பிரிவு
PAPER CLASS
PHY:. திரு.ஜெயசீலன்
CHE: திரு.டயஸ்
C.M. திரு.துரையப்பா
Bio:.
திரு.பொன்.திவாகரன்
ஆரம்பம்:
24.09.2005.
(Sat.10.30.a.m.)
(39983)


## வடமராட்சி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புத்தூர் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கைகலப்பு ஒன்றை அடுத்து மினிபஸ் சேவை தடைப்பட்டது. இது விடயமாக நேற்று பளையில் இயங்கும் யாழ். மாவட்ட அரசியல் துறையில் சந்திப்பு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சந்திப்பின் முடிவில், இன்று முதல் மினிபஸ் சேவையை வழமைபோன்று நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டதாக மினிபஸ் சங்கப் பிரதிநிதி ஒருவர் கூறினார். (எ)

## ஜே.வி.பி. ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சுயநிர்ணய உரிமையைச் சர்வதேசச் சமூகம் அங்கீகரிக்க வேண்டும் எனக் கோரும் வகையில் பல்கலைக்கழகச் சமூகம் முன்னெடுக்கும் இந்த மாபெரும் எழுச்சி நிகழ்வில் இனவாதக் கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளும் பட்சத்தில் அங்கு திரளும் தமிழ்பேசும் மக்களின் உணர்வுகளை அவர்களும் அறிந்து கொள்வர்.

அதற்காகவே,இந்த அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டுள்ளது என்று பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை தமிழ்,முஸ்லிம்,சிங்கள அரசியல் கட்சிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள்,இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதரங்கள் என்பவற்றுக்கும் பொங்கு தமிழுக்கான அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. (த-13)

## கதிர்காமருக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தாபப் பிரேரணையில் தமது நேரத்தை வீணடிப்பதில்லை. ஆனால், நேற்று ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ ஒருமணி நேரம் கதிர்காமரின் ஆளுமைத் தன்மைகளைப் புகழ்ந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் அனுதாபம் தெரிவித்துப் பேசினார்.

மற்றும் அமைச்சர்களான தினேஷ் குணவர்த்தன, பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண, ஜோன் செனவிரத்ன ஆகியோருடன் பிரதியமைச்சர் ஹுஸன் பைஸாவும் பேசினர்.

இறுதியாகச் சபாநாயகர் தனது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டதுடன், அனுதாபத் தீர்மானத்தின் நகலை கதிர்காமரின் குடும்பத்தினருக்கு அனுப்பிவைக்கும்படிபணித்தார். (எ-க)

## நுவரெலியாவில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடவடிக்கைகள் பிரிவிற்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து பிரதமர் மாளிகைக்கு அருகில் வைத்து இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து 'சொனி' ரக டிஜிட்டல் வீடியோ கருவியும் சில கசெட்டுக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர்கள் 41 வயதான அப்புசாமி ஜோதிராம் மற்றும் 38 வயதுடைய அப்புசாமி கிருஷ்ணசாமியென்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-க)

## ஜனாதிபதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விக்கிரமநாயக்கவின் தலைமையில் நேற்று முன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தின்போது நிதியமைச்சர் சார்பாக முன்வைக்கப்பட்ட இந்த யோசனைக்கு அனுமதி வழங் கப்பட்டது.

அதேபோல், வரவு - செலவுத் திட்டத்தையொட்டிய உத்தேச மதிப்பீட்டுப் பிரேரணையை ஒக்டோபர் 4ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு குறித்து அண்ணளவான விவரங்கள் இதன் ஊடாக நாடாளுமன்றத்திற்கு அறிவிக்கப்படவுள்ளன. (எ-க)

## முஸ்லிம்களின் சுயநிர்ணய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் யாரென்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. அதன் உயர் சபை விரைவில் வேட்பாளரைத் தெரிவு செய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயங்கள் குறித்து அறிவிக்கும் செய்தியாளர் மாநாடொன்றை இக்கூட்டமைப்பு நேற்று கொழும்பில் நடத்தியது. அதில் உரையாற்றிய கூட்டமைப்பின் தலைவர் ஹாபிஸ் நஸீர் அஹமட் கூறியதாவது:-

முஸ்லிம்களின் உரிமை மற்றும் பாதுகாப்புப் போன்றவற்றை உறுதிப்படுத்தும் தேவையில் இன்று முஸ்லிம்கள் உள்ளனர். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் இதற்கான சரியான வாய்ப்பாகும்.

இதை உரியமுறையில் பயன்படுத்தும் நோக்கில் எமது கூட்டமைப்பு செயலில் இறங்கியுள்ளது. முஸ்லிம்களின் உரிமைகள் தொடர்பான 24 அம்சக் கோரிக்கைகளை நாம் இரண்டு பிரதான வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரிடம் சமர்ப்பித்தோம். அவர்கள் வழமைபோல 'நாம் செய்வோம்' என்றார்களே தவிர, எழுத்து வடிவில் உறுதியளிக்க மறுத்துவிட்டனர்.

'உங்களுக்கு என்ன வேண்டும்?', 'எத்தனை அமைச்சுப் பதவிகள் வேண்டும்?'- என்று கேட்டார்களே தவிர, முஸ்லிம்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்கவில்லை.

சிங்களத் தலைவர்கள் நிச்சயம் முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்க்கமாட்டார்கள் என்பது தெளிவாகியுள்ளது. பதவிகளுக்காக நாம் அடிமையாக மாட்டோம். எமது தனித்துவத்தை விட்டுக் கொடுக்கமாட்டோம். ஆகவேதான் நாம் தனித்துப் போட்டியிட முடிவெடுத்தோம்.

இத்தேர்தலில் வெற்றிபெற்று நாம் ஜனாதிபதிப் பதவியொன்றைப் பெறமாட்டோம். எமது கொள்கைக்காகவே போட்டியிடுகின்றோம். நாம் தோற்கலாம். ஆனால், எமது கொள்கை என்றைக்கும் தோற்காது.

ரணிலுக்கு நாம் அளிக்கும் வாக்கு முஸ்லிம்களை அடிமையாக்குவதற்காக நாம் வழங்கும் அதிகாரமாகும். மஹிந்தவுக்கு நாம் அளிக்கும் வாக்கு யுத்தத்தை மீண்டும் தொடங்குவதற்காக நாம் வழங்கும் அதிகாரமாகும்.

ரணிலோடு ஒட்டி நிற்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், உரிய அழுத்தத்தைக் கொடுக்கத் தவறியதால் முஸ்லிம்கள் ரணிலின் ஆட்சியில் புறந்தள்ளப்பட்டனர். மேலும் மேலும் நாம் சிங்களத் தலைவர்களுடன் சேர்ந்திருந்து, முஸ்லிம்களுக்கு எதையும் பெற்றுக்கொடுக்க முடியாது. நாம் தனித்து நின்று செயற்படுவதே சரியான வழி.

பழைய கசப்பான அனுபவங்களை எல்லாம் மறந்து முஸ்லிம்களின் உரிமைகளுக்காக, முஸ்லிம் காங்கிரஸும் எம்முடன் வந்து இணைந்தால் அதை நாம் பெரிதாக வரவேற்கின்றோம். அதேபோல ஏனைய முஸ்லிம் கட்சிகளுக்கும் நாம் அழைப்பு விடுக்கின்றோம்.- என்றார். (எ-க)

## பிரதமரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யில் இருந்து விடுபட்டு வாழ்ந்தார்.

அவர் தன்னை ஒரு தமிழ் இனவாதியாக அடையாளம் காட்டிக்கொள்ளாமல் ஓர் இலங்கையன் என்று கூறுவதில் பெருமை கண்டவர். 1983ஆம் ஆண்டில் இடம்பெற்ற இனப்படுகொலைகளின் போதும் அவர் இந்த நிலையில் இருந்து புரளவில்லை.

தான் ஒரு தமிழராக இருந்துகொண்டு, ஐக்கிய இலங்கை - ஒன்றுபட்ட நாடு என்ற கொள்கையில் உறுதியாக இருந்தார். அதுவே அவருடைய உயிருக்கு அச்சுறுத்தலாகவும் அமைந்தது. ஆனால், அவர் தனக்கு ஏற்பட்டுள்ள உயிர் ஆபத்தையும் துச்சமாகக் கருதித் துணிச்சலுடன் செயற்பட்டார்.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக நோர்வே அனுசரணையாளர்களையும் துணிச்சலுடன் விமர்சனம் செய்தவர் கதிர்காமர். ஜனாதிபதியின் பிறந்தநாள் தொடர்பான கட்டுரை ஒன்றிலேயே கதிர்காமர் இதனை விமர்சித்துள்ளார். இதன்மூலம் தாம் எவருக்கும் தலைவணங்காதவர் என்பதை அவர் உறுதிப்படுத்திவிட்டார்.

அமைச்சர் கதிர்காமர் நாட்டின் பிரிவினையையும், புலிகளின் அராஜகத்தையும், வெளிப்படையாகவே கண்டித்தவர். சர்வதேச மட்டத்தில் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டதற்கும் துணைநின்றவர். இதனாலேயே அவர் புலிகளால் கொல்லப்பட்டார். இது புலிகள் இயக்கத்திற்கு கிடைத்த ஒரு தோல்வியேயன்றி வெற்றி அல்ல.- என்றார் விமல் வீரவன்ஸ. (எ-க)

## இந்தியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் அமெரிக்கா சென்றிருந்த ஆறுமுகன் தொண்டமான் தமக்கு நெருக்கமான ஒருவரின் ஆலோசனைக்கமைய அங்கிருந்து நேரடியாக இந்தியா திரும்பினார்.

ஹைதராபாத்தில் உள்ள பிரபல ஜோதிடர்களைத் தற்போது சந்தித்து கிரகபலன்களை கேட்டறிந்துவரும் ஆறுமுகன் தொண்டமான், அந்த யோசனைகளைக் கவனத்தில் எடுத்து தனது அரசியல் காய்நகர்த்தல் மற்றும் வியூகங்களை மேற்கொள்ளவுள்ளார் எனக் கூறப்பட்டது.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் குறித்தான இ.தொ.காவின் தற்போதைய நிலைப்பாடு குறித்து அவரிடம் 'உதயன்' கேட்டபோது, இது தொடர்பான பேச்சுகள் தற்போது கொழும்பில் நடைபெற்று வருகின்றன என்றும், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தாம் நாடு திரும்பிய பின்னர் இதுகுறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

தமது குடும்பத்தவரைச் சந்திப்பதற்காகத் தாம் இந்தியா சென்றார் என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-க)


eTouch COMPUTER SYSTEM
" The right way to touch IT "
அனைத்து Diploma
கற்கைநெறிகளுக்குமான
புதிய பிரிவுகள்
ஆரம்பம்!!!
80% OFF
INTERNET & E-MAIL 1,000/=
OFFICE AUTOMATION
DESKTOP PUBLISHING
PHOTO MIXING 1,500/=
PROGRAMMING
HARDWARE
HIGHER DIPLOMA IN AUTOCAD 3000/=
(New South Wales University Syllabus & Handouts)
MULTIMEDIA 3,500/=
ஆரம்பம்: 17,18,24,25 -09-2005
மானிப்பாய் வீதி, மருதனார்மடம்
021-4590222 etouch@wow.lk



EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...


தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.